விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 04 சனிக்கிழமை (18.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 30

- காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் -

## ஐ.நா சபையின் ஒருங்கிணைப்பாளர் ஜனாதிபதி கோட்டாவிடம் கேட்டறிந்தார்

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைகளை ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் கேட்டறிந்து கொண்டார்.

நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்வித்துறை, தகவல் தொழி நுட்ப மேம்பாடு மற்றும் அரச நிறு வனங்களின் டிஜிட்டல் மயமாக்கம் போன்ற செயற்பாடு களுக்கு ஐக்கிய நாடுகள் 23

## மைத்துனரை கோடரியால் வெட்டி படுகொலை செய்தவருக்கு

10 ஆண்டுகள் கடூழியச் சிறை
யாழ்.மேல்நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தனது மைத்துனரை கோடரி யால் வெட்டி படுகாயம் ஏற்படுத்தி அவரது உயிரிழப்புக்கு காரண மான குடும்பத் தலைவருக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண் டனை விதித்து யாழ்ப் பாணம் மேல் நீதிமன்ற 23

பொதுத் தேர்தலில் களமிறங்க

# சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய கூட்டணி உருவானது

## கடும் நெருக்கடியில் ரணில் குழுவினர்



(கொழும்பு)

**சஜித் பிரேமதாஸ தலைமையில் கூட்டணி ஒன்றினை உருவாக்கி எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்க வுள்ளதாக சஜித் பிரேமதாச ஆதரவு அணியினர் முடிவெடுத்துள்ளனர்.**

**இதனால் கடும் நெருக்கடிக்கு ரணில் தரப்பினர் உள்ளாகியுள்ளனர்.**

புதிய கூட்டணியின் தலைவ ராக சஜித் பிரேமதாஸ செயற்பட வுள்ள நிலையில், பிரதித் தலை வராக பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க செயற்படவுள் ளார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப் பினர்களான சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் மற்றும் திகாம்பரம் ஆகியோரும் சஜித் அமைக்கும் கூட்டணியில் இணையும் சாத்தியம் உள்ளதாக வும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் 60 பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்படும் நிலையில், பெரு 23

## பொதுமக்கள் அரச நிறுவனங்களுக்கு செல்வதற்கு பதிலாக இணையத்தினூடாக சேவைகள்

ஜனாதிபதி கோட்டா பணிப்புரை



(கொழும்பு)

பொதுமக்கள் அரச நிறுவனங் களுக்குச் செல்வதற்கு பதிலாக இணையத்தினூடாக குறித்த சேவைகள் மற்றும் அனுமதி களை வழங்கும் முறையொன் றினை விரைவில் உருவாக்கு மாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணித்துள்ளார்.

நேற்று நண்பகல் ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர் இந்தப் பணிப் புரை வழங்கினார்:

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய் திக் குறிப்பில் தெரிவிக்கப் 23

சு.கட்சியிலிருந்து

## சந்திரிகா நீக்கம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா பண்டார 23

## விமானப் படை வைத்திருந்த பயங்கரமான அமைப்பு புலிகளே

பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(திருகோணமலை)

விமானப்படை வைத்திருந்த ஒரேயொரு பயங்கரவாத அமைப் பான விடுதலைப்புலிகள் அமைப்பை தோற்கடிக்க விமானப் படையினர் பாரிய பங்களிப்பினை வழங்கி யிருந்ததாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரி 23

## ஒற்றையாட்சிக்கான இடைக்கால அறிக்கையை நிராகரித்து தேசத்தின் இருப்பை பாதுகாப்போம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசினால் கடந்த ஆட்சியில் தயாரிக்கப்பட்டு பாராளு மன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய ஒற்றையாட்சிக்கான இடைக்கால அறிக்கையை நிராகரித்து எமது தேசத்தின் இருப்பைப் பாதுகாப்போம் என யாழ்.பல்கலைக்கழக மாண வர ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பொங்குதமிழ் நிகழ்வின் 19ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் ஒன்றி யத்தின் ஏற்பாட்டில் பல் கலைக்கழக வளாகத் 23

## அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று யாழ் விஜயம்

பல்வேறு இடங்களில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

சிறிய, நடுத்தர தொழில்துறை, தொழில் முயற்சி, கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ஸ யாழில் பல்வேறு இடங்களுக்கு நேற்று விஜயம் மேற்கொண்டார்.

இதன்படி, அச்சு 23

## தேர்தலில் போட்டியிட போவதில்லை

ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி 23

## கதிரையைக் காப்பாற்ற ரணில் புதுயோசனை

கருவுக்கு ஐ.தே.க தலைவர் பொறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தலை வர் என்ற பொறுப்பை கரு ஜயசூரிய விடம் வழங்க ரணில் தரப்பு திட்டமிட்டுள்ளது. இதன்படி, அடுத்த ஓரிரு நாட்களில் கரு ஜய சூரியவை சந்தித்து தனது யோசனையை 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிவிழாவும் சேவைநயப்பும்

உயர்திரு.
**சின்னத்தம்பி சிவமூர்த்தி**
SLTS - I

பிரதி அதிபர் -
யா/வலி/நவாலி தெற்கு
அ.மி.த.க.பாடசாலை
18.01.2020



| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 18.02.1960 |
| சொந்த இடம் | : | இணுவில் |
| தந்தை | : | திரு.கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி |
| தாய் | : | திருமதி.ஞானபூசணம் சின்னத்தம்பி |

**கல்வி :** ஆரம்பக்கல்வி , இடைநிலைக்கல்வி : யா/இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம் (இணுவில் மத்திய கல்லூரி)
உயர் நிலைக் கல்வி : சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி

**ஆசிரியப் பணி - ஆரம்பக்கல்விப் பயிற்சி**

1. இரத்தினபுரி ஹேயல் தமிழ் வித்தியாலயம் : எம்பிலிப்பிட்டி வலயம் – 29.08.1988 – 25.01.1992
2. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை : நுவரெலியா – 28.01.1992 – 31.12.1993
3. இரத்தினபுரி எக்யந்த வித்தியாலயம் : எம்பிலிப்பிட்டி – 04.01.1994 – 03.08.2002
4. யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் : வலிகாமம் – 26.08.2002 – 31.12.2007
5. யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம் : வலிகாமம் – 02.01.2008 – 06.09.2017
6. யா/நவாலி தெறகு அ.மி.த.க. பாடசாலை : வலிகாமம் – 07.09.2017 – 17.01.2020
   பிரதி அதிபர் 05.02.2019

எமது பாடசாலையில் ஆசிரியராக, பிரதி அதிபராக பதவி வகித்து சேவையிலிருந்து ஓய்வு பெறும் மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக்கழகம் – யா/நவாலி தெற்கு அ.மி.த.க பாடசாலை.*
*சிவமூர்த்தி மணிவிழாச் சபை – நவாலி தெற்கு. மானிப்பாய்.* (1906)


# புதிய நுளம்பு இனங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நோய்களை ஏற்படுத்தக்கூடியவை என சந்தேகிக்கப்படும் புதிய நுளம்பு இனங்கள் நாட்டில் கண்டறியப்பட்டுள்ளதாக மருத்துவ ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கியுலெக்ஸ் இனத்தை சேர்ந்த புதிய நுளம்பு இனங்கள் மீரிகம சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு சொந்தமான அம்பேபுஸ்ஸ பகுதியில் முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


## விற்பனைக்கு

கிறேசர் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு : பாலசிங்கம் சுதாகரன் - புன்னாலைக் கட்டுவன் தெற்கு. (1907)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட (புறொயிலர்) கல்பேட், பேரன்ஸ், ஊர்ச் சேவல் என்பன சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**நந்தினி பாம்**
இராச வீதி, கல்வியங்காடு.
**T.P: 077 968 3028** (1890)

# கண்ணீர் காணிக்கை



கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்திற்கும் விளையாட்டுக் கழகத்திற்கும் சிறப்பாக சேவையாற்றிய கொக்குவில் இந்து பிரதி அதிபர்

**தம்பிஐயா தேவராஜா**
(JP)

(இளைப்பாறிய பிரதி அதிபர் - யா/கொக்குவில் இந்துக்கல்லூரி, அதிபர் - அஸ்ரன் சர்வதேச கல்லூரி, இணுவில்) (C-8939)

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும் (K.C.C.C. & K.C.C.C.SC)**

# புலமைப்பரிசிலும் தொழிற்பயிற்சியும்

கடந்த 2000ம் ஆண்டு முதல் ஐ.நா. அபிவிருத்தி திட்ட உதவியுடன் அரச திணைக்களங்களில் கணனிப்பயிற்சியை வழங்கிய யாழ். MCS IT CAMPUS நிறுவனம் தனது 20 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வடபிராந்திய தகவல் தொழில்நுட்ப சம்மேளனத்துடன் இணைந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசிலும் தொழிற்பயிற்சியும் வழங்க தீர்மானித்துள்ளது.

**Bachelor in Information Technology** (BIT) கொழும்பு பல்கலைக்கழகம். CIMA UK. Computer Engineering - USA. மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற CAA மற்றும் ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளை பயில அரிய சந்தர்ப்பம் !

**100% இலவச கற்றலுடன் முழுநேர தொழில் பயிற்சியும் வழங்கப்படும்.!!**

புலமைப்பரிசில்கள் க.பொ.த உயர்தர பெறுபேற்றின் அடிப்படையிலும் ஏனையவர்களுக்கு நிறுவனத்தினால் நடத்தப்படும் பரீட்சைகளின் அடிப்படையிலும் வழங்கப்படும் !!!

புலமைப்பரிசிலிற்கு உங்கள் பெயர், முகவரி, பிறந்த திகதி என்பவற்றை
**077 239 5895** என்ற எண்ணிற்கு SMS செய்யவும்.
(C-8931)

## கணனி திருத்தம்

**IPhone, Android Phone களும் திருத்தி கொடுக்கப்படும்.**
உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கும், அலுவலகங்களுக்கும் வந்து திருத்தித் தருகின்றோம்.
**கணனிகள் விற்றல், வாங்குதல். பழைய கணனிகளும் வாங்கப்படும். தொடர்புகளுக்கு :**
**ALM Computer System - 077 243 8537** (1905)

## வேலை வாய்ப்பு

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு கணக்கு வேலை தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கவும். Accountant or Trainees A/L முடித்தவர்கள், Degree Holders ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. வயது எல்லை : 18-35, சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். நேர்முகத் தேர்வுக்கு 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 - 5.00 PM வரை CV உடன் சமுகம்தரவும்.

தொடர்புகளுக்கு : No.177,B, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
N.S.T.Motors (P.V.T.) L.T.D (1904)

மேலதிக விபரங்களுக்கு : T.P No : 076 717 3234, 021 221 4605 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

union assurance
Trust in your tomorrow, today

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள்
யாழ்.பிராந்தியம்

◎ முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி ◎ வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்

**முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**
- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**
- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்**
- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 25,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்



(1886)

உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 25.01.2020க்கு முன்னர் sellaiyakiritharan89@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## ஒற்றையாட்சி; இடைக்கால அறிக்கையை நிராகரித்து

# பொங்குதமிழ் பிரகடனத்தை வலியுறுத்தி இந்த வருடம் மாபெரும் மக்கள் எழுச்சி!

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் பிரகடனத்தை மீள வலியுறுத்தும் வகையில் பொங்குதமிழ் பிரகடனத்தின் 19 ஆம் ஆண்டு நிறைவு நாள் நேற்று யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் நினைவு கூரப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் கலந்து கொண்டு பொங்குதமிழ் தூபிக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் பொங்குதமிழ் பிரகடனத்தை வலியுறுத்தி கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரால் அறிக்கை வாசிக்கப்பட்டது. குறித்த அறிக்கையில்,

ஈழத்தமிழ் மக்களின் சுதந்திர தாயகத்துக்கான அடிப்படை அபிலாஷைகளையும் நியாயங்களையும் சர்வதேசத்துக்கு ஒரே குரலில் தமிழ்மக்கள் வெளிப்படுத்திய தளமாகவும் இலங்கை இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த தமிழரின் மரபுவழித் தாயகமும், அதனால் சிதைக்கப்பட்டிருக்கும் தன்னாட்சி உரிமையையும் வேண்டிநின்ற தமிழ்மக்கள் தமிழ்த் தேசியத்தின்பால், தாம் கொண்டுள்ள ஆழமான விடுதலை உணர்வை வெளிக்கொணர்வதற்கும், வலியுறுத்துவதற்குமாக 2001.01.17 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் - மிகக் கொடூரமான இராணுவ அடக்கு முறைக்கு மத்தியிலும் யாழ்.குடாநாட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி யாழ்.பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாக திரண்ட நிகழ்வே "பொங்குதமிழ்" ஆகும்.

இதனைத் தொடர்ந்து ஈழத்தின் அனைத்து மாவட்டங்களிலும், புலம்பெயர் தேசங்களிலும் பொங்கு தமிழாய் எம் மக்கள் விடுதலைக்காய் பேரெழுச்சி கொண்டனர்.

அப்போது யாழ்.மண்ணில் இலங்கை ஆக்கிரமிப்பு இராணுவத்தினரின் அடக்குமுறைகளையும், கொலை அச்சுறுத்தல்களையும், வீதிமறிப்புக்களையும், கெடுபிடியான சோதனை நடவடிக்கைகளையும் தாண்டி குடியிருப்புக்களின் மதில்களால் பாய்ந்தும், குறுக்கு பாதைகளினாலும் இளைஞர்கள் முதியவர்கள், மதகுருமார், பெண்கள், மாணவிகள் என்ற பாகுபாடின்றி சாரை சாரையாக திரண்ட பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களுடன் பேரெழுச்சி கொண்டு பொங்கிப் பிரவாகித்து நின்றது "பொங்கு தமிழ் 2001".

இலங்கை அரசின் கொடுமைகளுக்கு எதிராகவும் தமிழ்த்தேசத்தின் மீதான திட்டமிட்ட அழிப்பிற்கு எதிராகவும் அவற்றைத் தகர்த்தெறிந்து எழுச்சி கொண்டு தமிழ் மக்கள் தமது உரிமைக் குரலை உயர்த்தி வெளிப்படுத்திய எழுச்சிமிக்க பிரகடனமே "பொங்குதமிழ்".

இந்நிகழ்வு நடைபெற்று இன்றுடன் (நேற்றுடன்) 19 ஆண்டுகள் நிறைவடைகின்றன. எனினும் எம்மினம் இன்னமும் சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைக்குள் சிக்குண்டு எமது தேசத்தின் தாங்குதூண்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ் அழிப்பு தொடர்வதனை நாம் அனுமதிக்க முடியாது.

இந்நாளில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எமது பல்கலைக்கழகம் கடந்த காலத்தில் மேற்கொண்ட வரலாற்றுக் கடமையை ஜனநாயக வழியில் தொடர்ந்து முன்னெடுப்போம் என உறுதியெடுக்கின்றோம்.

இப்புனித நாளில் இலங்கை அரசினால் கடந்த ஆட்சியில் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஒற்றையாட்சிக்கான இடைக்கால அறிக்கையை நிராகரித்து எமது தேசத்தின் இருப்பை பாதுகாக்க பின்வரும் தீர்மானங்களை வலியுறுத்துகின்றோம்.

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழரின் தாயகம் அங்கீகரிக்கப்படல் வேண்டும், தமிழரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்,

தமிழ்த் தேசமும் அதன் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

மேற்படி கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தி இவ்வாண்டு இறுதிக்குள் மாபெரும் மக்கள் எழுச்சி நிகழ்வை இப்பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கவுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## அமைப்பாளர் பதவியிலிருந்து சந்திரிகாவை நீக்கியது சு.க.



(கொழும்பு)

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

அந்தவகையில், அத்தனகல அமைப்பாளர் பதவியிலிருந்து சந்திரிகாவை நீக்கியுள்ளதாக சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கட்சியின் அரசியல்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார். (இ-7)

## பெப்ரவரி 7 ஆம் திகதி

## பிரதமர் மகிந்த இந்தியா பயணம்



(கொழும்பு)


பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். டில்லிக்கு விஜயம் செய்யும் பிரதமர் மகிந்த, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட பலரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றதையடுத்து முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அவர் இந்தியா சென்றிருந்தார்.

அதனையடுத்து வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இந்திய விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அதனையடுத்தே பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் இந்தியாவிற்கான விஜயம் அமையவுள்ளது. இந்த விஜயத்தின் போது பிரதமர் திருப்பதிக்கும் சென்று வெங்கடாச்சலபதியை தரிசிக்கவுள்ளார். இதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-7)

## கொழும்பில் மீண்டும் தூசி துகள்கள் அதிகரிப்பு



(கொழும்பு)

கொழும்பு வளிமண்டலத்தில் தூசி துகள்கள் மீண்டும் அதிகரித்துக் காணப்படுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்தது.

நேற்றுக் காலை வேளையில் தூசி துகள்களின் அளவுச் சுட்டி 100-150 வரை காணப்பட்டதாக, அந்நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் சரத் பிரேமசிறி தெரிவித்தார்.

இந்நிலைமை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தின் முதல் வாரம் வரை நீடிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

சிறு பிள்ளைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சுவாச நோய்த் தாக்கத்திற்கு உள்ளானவர்கள் இது தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ரஞ்சனின் விவகாரம் கட்சியை விட பலரின் வாழ்க்கையையே மாற்றும்

## சஜித் சுட்டிக்காட்டு



(கண்டி)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சனின் விவகாரம் கட்சியை விட பலரது வாழ்க்கையிலேயே மாற்றத்தை ஏற்படுத்துமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை கண்டி தலதாமாளிகையில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்ட சஜித், பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத்தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

"பொதுத் தேர்தலில் எங்களது செயற்பாடுகள் தொடர்பாக கூறுவதற்கு முன்னர் புதிய மாற்றமொன்றை கொண்டு வருவதற்கு மக்கள் தயாராக இருக்கின்றார்களா? என்பதையே அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் நாட்டின் உண்மைகளை உணர்ந்து மக்கள் பொதுத் தேர்தல் ஊடாக எங்களுக்கு அதிகாரத்தை வழங்கினால், அவர்களுக்குத் தேவையான அபிவிருத்திச் செயற்பாடுகள் உட்பட நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை எம்மால் வழங்க முடியும்.

இதேவேளை ரஞ்சன் விவகாரம் கட்சியில் பிரச்சினை என்பதை விட பலரது வாழ்க்கையிலேயே பிரச்சினையை ஏற்படுத்துமென தோன்றுகின்றது.

எனவே ரஞ்சன் விவகாரம் தொடர்பாக நான் எந்தவொரு கருத்தையும் வெளியிட வேண்டிய தேவை கிடையாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆஸியை துவம்சம் செய்தது இந்தியா



இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 2-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ராஜ்கோட்டில் நடைபெற்றது. டாஸ் வென்ற அவுஸ்திரேலியா முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, இந்தியாவின் ரோகித் சர்மா, தவான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இருவரும் தொடக்கம் முதலே அடித்து ஆடியதால் இந்தியாவின் ஸ்கோர் சீராக உயர்ந்தது. ரோகித் சர்மா 42 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

சதமடிப்பார் என எதிர்பார்த்த நிலையில் தவான் 96 ரன்னில் ஆட்டமிழந்தார். விராட் கோலி மீண்டும் ஒரு அரைச்சதம் அடித்தார். அவர் 78 ரன்னில் அவுட்டானார்.



அடுத்து இறங்கிய ஷ்ரேயாஸ் அய்யர் (7), மணிஷ் பாண்டே (2) சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். இறுதியில் கேஎல் ராகுல் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 80 ரன்னில் வெளியேறினார். இறுதியில், இந்தியா 6 விக்கெட் இழப்பிற்கு 340 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து 341 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக டேவிட் வார்னர், ஆரோன் பிஞ்ச் இறங்கினர்.

வார்னர் 13 ரன்னிலும், பிஞ்ச் 33 ரன்னிலும் வெளியேறினர். அடுத்து இறங்கிய ஸ்மித், லாபுஷேன் இருவரும் பொறுப்புடன் ஆடினர். இந்திய பந்துவீச்சை நாலா புறமும் சிதறடித்தனர். நிதானமாக ஆடிய ஸ்மித் அரைச் சதம் கடந்தார். லாபுஷேன் 46 ரன்னில் ஆட்டமிழந்தார்.



குல்தீப் பந்துவீச்சில் ஒரே ஓவரில் அலெக்ஸ் கேரி மற்றும் சதத்தை நெருங்கிய ஸ்மித் 98 ரன்னில் ஆட்டமிழந்தனர். அடுத்து இறங்கிய வீரர்களை இந்திய பந்துவீச்சாளர்கள் விரைவில் அவுட்டாக்கினர்.

இறுதியில், அவுஸ்திரேலிய அணி 49.1 ஓவரில் 304 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன் மூலம் 36 ரன் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றதுடன், ஒருநாள் தொடரை 1-1 என சமன் செய்தது. இந்தியா சார்பில் மொகமது ஷமி 3 விக்கெட்டும், குல்தீப் யாதவ், ரவீந்திர ஜடேஜா, ஷைனி ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

## 19 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ண கிரிக்கெட் தென்னாபிரிக்காவில் நேற்று ஆரம்பம்

ICC UNDER19
CRICKET WORLD CUP
SOUTH AFRICA 2020

அடுத்த தலைமுறைக்கான அதிசிறந்த கிரிக்கெட் வீரர்களை உருவாக்கவல்ல ஐ.சி.சி. 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட்டின் 13 ஆவது அத்தியாயம் தென்னாபிரிக்காவில் நேற்று ஆரம்பமானது.

நான்கு குழுக்களில் 16 நாடுகள் பங்குபற்றும் இந்த உலகக் கிண்ண அத்தியாயம் வரவேற்பு நாடான தென்னாபிரிக்காவுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் கிம்பர்லியில் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பித்த போட்டியுடன் தொடங்கியது.

13ஆவது அத்தியாயத்தில் 19 வயதுக்குட்பட்ட உலக சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டி பெப்ரவரி 9ஆம் திகதி பொச்செவ்ஸ்ட்ரூம் அரங்கில் நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 1988இல் இளையோர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி முதல் தடவையாக நடத்தப்பட்டது. அங்கு ரார்ப்பண போட்டியில் அவுஸ்திரேலியா சம்பியனானது.

பத்து வருடங்கள் கழித்து 1998லிருந்து 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெற்றுவருகின்றது.

இதுவரை நடந்து முடிந்துள்ள 12 அத்தியாயங்களில் நடப்பு சம்பியன் இந்தியா 4 தடவைகளும் அவுஸ்திரேலியா 3 தடவைகளும் சம்பியனாகியுள்ளன. பாகிஸ்தான் மாத்திரமே இரண்டு தொடர்ச்சியான (2004, 2006) தடவைகள் சம்பியனானது. இங்கிலாந்து, தென்னாபிரிக்கா,மேற்கிந்தியத் தீவுகள் ஆகியன தலா ஒரு தடவை சம்பியனாகின.

இம்முறை 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் டெஸ்ட் விளையாடும் 11 நாடுகளும் ஐ.சி.சி.யில் இணை அங்கத்துவம் பெற்ற 5 நாடுகளுமாக 16 நாடுகள் விளையாடுகின்றன.

நாடுகள் குழுப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம் லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு குழுவிலும் இடம்பெறும் டெஸ்ட் விளையாடும் நாடுகள் பெரும்பாலும் முதலிரண்டு இடங்களைப் பெற்று பிரதான கிண்ணத்துக்கான கால் இறுதிவரை முன்னேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு குழுவிலும் கடைசி இரண்டு இடங்களைப் பெறும் நாடுகள் 9ஆம் இடத்திலிருந்து 16ஆம் இடம்வரையான நிரல்படுத்தலுக்கான சுற்றில் விளையாட தகுதிபெறும்.

குழு டியில் இடம்பெறும் இலங்கை தனது ஆரம்ப லீக் போட்டியில் இந்தியாவை நாளை ஞாயிற்றுக்கிழமை எதிர்த்தாடவுள்ளது. தொடர்ந்து நியூஸிலாந்தை எதிர்வரும் 22ஆம் திகதியும் ஜப்பானை 26ஆம் திகதியும் இலங்கை சந்திக்கவுள்ளது.

கொழும்பில் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணப் போட்டியில் இறுதி ஆட்டம்வரை முன்னேறிய இலங்கை, இந்தியாவிடம் தோல்வியடைந்து சம்பியன் பட்டத்தை தவறவிட்டிருந்தது.

இம்முறை எப்படியாவது இறுதி ஆட்டம் வரை முன்னேற இலங்கை முயற்சிக்கும் என அணித் தலைவர் நிப்புன் தனஞ்சய தெரிவித்துள்ளார்.

## ஒரு நாள் போட்டிகளில் விளையாட விரும்புகின்றேன் - ஏபி டி வில்லியர்ஸ்



தென்னாபிரிக்கா அணியின் தலைசிறந்த பேட்ஸ்மேனாக திகழ்ந்தவர் ஏபி டி வில்லியர்ஸ். அதிரடி 150, அதிரடி சதம், அதிரடி அரைச்சதம் என ஒருநாள் கிரிக்கெட்டில் சாதனை படைத்தவர். கடந்த 2018-ம் ஆண்டு திடீரென ஏபி டி வில்லியர்ஸ் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் போர்டுக்கு மட்டுமல்ல, உலக கிரிக்கெட் ரசிகர்களுக்கு அவரது அறிவிப்பு அதிர்ச்சி அளித்தது.

2019 உலக கோப்பை தொடரின்போது மீண்டும் அணிக்கு திரும்ப பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் தென்னாபிரிக்கா கிரிக்கெட் போர்டு அதற்கு சம்மதிக்கவில்லை. இதற்கிடையே அம்லா போன்ற வீரர்கள் ஓய்வு பெற்றதால் தென்னாபிரிக்கா அணி திணற ஆரம்பித்தது.

அணியில் மாற்றம் கொண்டு வர ஸ்மித்தை இயக்குநராகவும், மார்க் பவுச்சரை தலைமை பயிற்சியாளராகவும் நியமித்தது. இருவரும் இந்த வருடம் நடைபெறும் ரி 20 உலக கோப்பை தொடரில் சிறப்பாக விளையாடுவதற்காக ஏபி டி வில்லியர்ஸை மீண்டும் அணிக்கு கொண்டு வர பேச்சுவார்த்தை நடத்தினர். ஏபி டி வில்லியர்ஸ் அணிக்கு திரும்ப சம்மதம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஒருநாள் கிரிக்கெட்டும் முடிந்து விடவில்லை என்று தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஏபி டி வில்லியர்ஸ் கூறுகையில் "நான் 50 ஓவர் கிரிக்கெட்டில் விளையாட விரும்புகிறேன். அதில் எந்தவொரு பிரச்சனையும் இருக்காது. நான் எப்போதுமே தென்னாபிரிக்காவுக்காக விளையாட விரும்புகிறேன். சர்வதேச கிரிக்கெட் விளையாடுவது மிகப்பெரிய கௌரவம்.

நான் மார்க் பவுச்சர் மற்றும் ஸ்மித்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். மேலும் சிலர் அதில் இணைந்திருந்தார்கள். ஆகவே, சாத்தியக்கூறு உள்ளது என்ற நம்பிக்கை உள்ளது. நான் விளையாடுவதற்கான சில சிறந்த விவாதம் நடைபெற்றது. நான் விளையாடும் ரி 20 லீக் போட்டிகளில் சிறப்பாக ரன்கள் அடிக்க வேண்டும்.

டிசம்பரில் இருந்து சில டெஸ்ட் போட்டிகளை பார்த்தேன். கிரிக்கெட்டில் இருந்து விலகி இருப்பது மிகவும் சிறந்தது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், நினைவுகள் எனது வாழ்க்கையை மாற்றியது. 11 மாதங்கள் நான் விளையாட விரும்பவில்லை. இது அதிகப்படியானது.

ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து முற்றிலுமாக ஒதுங்கி இருக்க விரும்பவில்லை. ஆனால், டெஸ்ட் கிரிக்கெட் முடிந்துவிட்டது" என்றார்.

# கல்வியங்காட்டில் வாள்வெட்டுக் கும்பல் அட்டகாசம்

## சமுர்த்தி வங்கி முகாமையாளரின் கார் தீயில் நாசம்






(குப்பிழான்)

யாழ்.கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த சமுர்த்தி வங்கி முகாமையாளருடைய பல இலட்சம் ரூபாய் பெறுமதியான கார் வாள்வெட்டுக் கும்பலால் தீயிட்டு எரிக்கப்பட்டதில் பெரும் சேதங்களுக்குள்ளானது. குறித்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது. கோப்பாய் சமுர்த்தி வங்கி முகாமையாளருடைய காரே இவ்வாறு தீயிட்டு எரிக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கல்வியங்காடு மூன்றாம் கட்டையில் அமைந்துள்ள மேற்படி சமுர்த்தி வங்கி முகாமையாளரின் வீட்டு வளவுக்குள் நேற்று அதிகாலை அத்துமீறி நுழைந்த வாள்வெட்டுக் கும்பல் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான காருக்குத் தீ வைத்தனர்.

சத்தம் கேட்டதையடுத்து வீட்டிலிருந்தவர்கள் கூச்சலிட்டனர். இந்நிலையில் அயலவர்களும் விழித்துக் கொண்ட நிலையில் வாள்வெட்டுக் கும்பல் அங்கிருந்து தப்பியோடியது. வீட்டிலிருந்தவர்களும், அயலவர்களும் இணைந்து விரைந்து தீயை அணைத்துள்ளனர். எனினும், கார் எரிந்து பெரும் சேதங்களுக்குள்ளானது.

இச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்துப் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகள் மேற்கொண்டனர். (இ-18)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹா கணபதிப் பிள்ளையார் திருக்கோவில் கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் (1008) இன்று 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் இடம்பெறும்.(இ-5)

## மின்சாரம் தடை

(குப்பிழான்)

மின் இணைப்பில் ஏற்பட்ட பழுது காரணமாக குப்பிழான், ஏழாலை பகுதிகளில் சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்பட்டது.

நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகினர். இந்நிலையில் மின் இணைப்புத் திருத்த வேலைகளையடுத்து மீண்டும் பிற்பகல் 03 மணியளவில் குறித்த பகுதிகளில் மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பியது. (இ-18)

# சீன அபிவிருத்தி திட்டத்தின் முன்னேற்றம் குறித்து அந்நாட்டு பிரதிநிதிகள் ஆராய்வு



(கொழும்பு)

சீன அரசின் நிதி உதவியின் கீழ் இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக அந்நாட்டு அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று வருகை தந்திருந்தது.

இதன்போது சீன நிதி உதவி திட்டத்தின் கீழ் வைத்திய உபகரணங்கள், மருத்துவ மாணவர்களுக்கான உபகரணங்கள் மற் Wk ;MRI ஸ்கானர் இயந்திரம் ஒன்றும் ராகம போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கான கட்டடம் மற்றும் பொலநறுவை சீன-இலங்கை நட்புறவு, தேசிய விசேட தொழில் துறையினரின் வைத்தியசாலைக் கட்டடம் ஆகியன சீன நிதி உதவியின் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகின்றது.

இவற்றையும் இக் குழுவினர் பார்வையிட்டனர். பொலநறுவை சீன-இலங்கை நட்புறவு தேசிய விசேட தொழில் துறை வைத்தியசாலை கட்டட நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஜூலை மாதம் நிறைவடையவிருப்பதாக அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சிக்கு அறிவிக்கப்பட்டது.

சீன சர்வதேச அபிவிருத்தி அமைப்பின் அலுவலகத்தின் உப தலைவர் உள்ளிட்ட 11 பேர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தைப்பொங்கல் விழா நாளை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கரணவாய் கிழக்கு கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் தைப்பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் இடம்பெறும்.

பொங்கல் நிகழ்வு நிலைய முன்றலிலும் கலை நிகழ்வுகள் ஜெயச்சந்திரன் கலையரங்கிலும் இடம்பெறும். (இ-7)

# இந்து வாலிபர் சங்க பொங்கல் விழாவில் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து

(யாழ்ப்பாணம்)

கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்கம் நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணியளவில் கைதடி கிழக்கு வீரமாகாளி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.முத்துகுமார கணேசக்குருக்கள் முன்னிலையில், இந்து வாலிபர் சங்கத் தலைவர் மு.பத்மரூபன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக வலம்புரி பத்திரிகை பிரதம ஆசிரியர்ந.விஜயசுந்தரம், கௌரவ விருந்தினர் ச.ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), கு.குபேந்திரராஜா (சுவிஸ்) ஆகியோர் கலந்து கொள்வர். இதில் இரவு 8 மணியளவில் இந்து வாலிபர் சங்க இளைஞர்கள் வழங்கும் "மாலைக்காக வாதாடிய முத்து மாரி மைந்தன் காத்தவராயன்" சிந்து நடைக் கூத்து இடம்பெறும்.(இ-5)

# இராசி பலன்

**மீனம்:** எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது, போசன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மேடம்:** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல் நலன் சீராகும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**இடபம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, வெளி யூர்த் தொடர்புகள் அனு கூலம் தரும், நன்மைகள் நாடி வரும் நாள்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சை குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தேவைகள் பூர்த்தியாகும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்கள் உறுதுணையாக இருப்பர், சுப காரியப் பேச்சுகளில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், மனச் சங்கடங்கள் கூடும் நாள்.

**துலாம்:** தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, உறவினர் தொடர்பான சில காரியங்களுக்காக சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கன்னி:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இராசி பலன்**

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சுக் | | | |
| சூரி.புத | | | |
| சனி.குரு கேது | செவ் | சந் | |

சந்திராஷ்டமம் ரேவதி

18.01.2020

தை 04, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு

அட்டமி முற்பகல் 9.20 மணிவரை

சுவாதி பின்னிரவு 3.37 மணிவரை

சுபநேரம் 3.35-5.05 மணிவரை

இராகுகாலம் 9.35-11.05 மணிவரை

அமிர்தசித்தம்

இதயத் தூய்மையே அழகு

வளவன்

# யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தை வடமாகாண ஆளுநர் பார்வையிட்டார்



(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதியில் இந்தியத் தூதரகத்தால் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கலாசார மண்டப கட்டடத் தொகுதியை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

இதன்போது யாழ்.மாநகர முதல்வர், இந்திய பிரதி உயர் ஸ்தானிகர், இந்திய துணைத் தூதுவர், யாழ்.மாநகர ஆணையாளர், ஆளுநரின் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கட்டட வடிவமைப்பாளர்களும் பொறியியலாளர்களும் கட்டட அமைப்புக்களின் தன்மைகள் தொடர்பில் ஆளுநருக்கு விளக்கமளித்தனர்.

இதன்போது குறித்த கட்டடத் தொகுதி விரைவாக மக்களின் பயன்பாட்டுக்கு கிடைக்கப்பெற வேண்டுமெனவும் கட்டடத்தில் உள்ள வசதிகள், வாய்ப்புகள் தொடர்பில் அனைவருக்கும் தெரியப்படுத்துவதோடு பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் தொடர்பான வினைத்திறனான நீண்டகால நிர்வாக பொறிமுறை தொடர்பில் மாநகர சபை விரைவாக திட்டமிட வேண்டுமெனவும் அதற்கான முன்மொழிவுகளை தனக்கு விரைவாக அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் வலியுறுத்தினார்.

நவீன வசதிகளைக்கொண்ட குறித்த கலாசார கட்டடத் தொகுதியை கலைகளின் மேம்பாட்டுக்கும் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் வினைத்திறனுடன் பயன்படுத்துவது தொடர்பாக அதிகாரிகளுக்கு ஆளுநர் ஆலோசனைகளை வழங்கினார். (இ-5)

யாழ்.செய்திகள்

# யாழ்.பல்கலைக்கழகத்தில் பொங்குதமிழ் பிரகடனத்தின் 19 ஆம் ஆண்டு நிறைவு நாள்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகத்தால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட பொங்குதமிழ் மாபெரும் மக்கள் எழுச்சியை மீள வலியுறுத்தும் வகையில் பொங்கு தமிழ் பிரகடனத்தின் 19 ஆம் ஆண்டு நிறைவுநாள் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபிக்கு முன்பாக இடம் பெற்ற நிகழ்வில் மண் மீட்புக்காக வீரகாவியமான மாவீரர்களையும், போரின் போது கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களையும் நினைவுகூர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் த. சிவரூபன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.அனுசன் ஆகியோர் இணைந்து பொங்குதமிழ் நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து பொங்குதமிழ் தொடர்பான நினைவுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் உப தலைவர் ரங்கநாதன் நிகழ்த்தினார். தொடர்ந்து பொங்குதமிழ் பிரகடனத்தின் 19 ஆம் ஆண்டு நிறைவு நாள் ஊடக அறிக்கை உத்தயோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பல்கலைக் கழக மாணவ, மாணவியர், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இதன்போது பொங்குதமிழ் நினைவுத் தூபியை அண்டிய பகுதிகளில் மஞ்சள், சிவப்பு வர்ணக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

கடந்த 17.01.2001 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்தால் அப்போதைய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் தமிழ் மக்களின் அபிலாசைகளான சுய நிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த்தேசியம் அங்கீகரிக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்னிறுத்தி மாபெரும் பொங்குதமிழ் எழுச்சிப் பேரணி நடந்தேறியது.

மேற்படி நிகழ்வில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகள் நேற்று நடந்த பொங்குதமிழ் பிரகடனத்தின் 19 ஆம் ஆண்டு நிறைவுநாளில் மீளவும் சர்வதேசத்திற்கும், அரசாங்கத்திற்கும் வலியுறுத்தப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-9-18)





யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவின் தலைமையில் தைப்பொங்கல் விழா கடந்த 15ஆம் திகதி ஸ்ரீ வல்லிபுரம் ஆழ்வார் கோவிலில் நடைபெற்றது.

(படங்கள்: மகாலிங்கம்)

# வட மாகாண பொங்கல் விழா கலை நிகழ்வுகள் வரணியில்

(கொடிகாமம்)

வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தென்மராட்சி பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தும் வட மாகாண பொங்கல் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் வரணி சிட்டி வேரம் கண்ணகை அம்மன் ஆலயத்திலும் தைப்பொங்கலை முன்னிட்டு கலை நிகழ்வுகள் வரணி தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்திலும் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், சிறப்பு விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், கௌரவ விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு ஆகியோர் கலந்துகொள்வர்.

வரணி கலாசார மத்திய நிலையத்தின் வரவேற்பு நடனம் கிளிநொச்சி ஜானு அரங்காற்றுகையகத்தின் அரிவிவெட்டு நடனம், மறவன்புலவு நித்தர் குல அம்மன் கலைக்குழுவின் உடுக்கிசை, கைதடி மத்தி சனசமூக நிலையத்தினரின் கும்மி நடனம், சாவகச்சேரி ஜோன்சன் நடனக்கலை மன்றத்தினரின் கோலாட்டம், மந்துவில் கிழக்கு கொடிகாமம் திருமதி த.கலைச்செல்வியின் கரகம்.வரணி கலாசார மத்திய நிலையத்தின் அரிவிவெட்டுப் பாடல் போன்ற பாரம்பரிய கலை நிகழ்வுகள் இடம்பெறும். (இ-114)

# கலைத்தூது அழகியல் கல்லூரியின் 11 ஆவது பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 11 ஆவது பரிசளிப்புவிழா நாளை (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல.286, பிரதான வீதியிலுள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும்.

கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பிரான்சிஸ் சேவியர் அன்ரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்வி அலுவலக அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலராணி ஜெயபாலசிங்கமும் கலந்து கொள்வர்.

இதில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (இ-7)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயத்தின் திருவாசக முற்றோதல் பாராயணம் நாளை மறுதினம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறும். (இ-5)

# அமெரிக்காவின் தடையைப் பொருட்படுத்தாமல் இலங்கைக்கு ஆயுதம் வழங்க ரஷ்யா தீர்மானம்

(மொஸ்கோ)

அமெரிக்காவின் தடையை பொருட்படுத்தாமல் இலங்கை இராணுவத்துக்கு ஆயுதங்கள் மற்றும் ரவைகளை வழங்குவதற்கு ரஷ்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, இலங்கை இராணுவம் பயன்படுத்தும் எம்.ஐ. 16 ரக போக்குவரத்து ஹெலிகொப்டர்கள், மிக் தாக்குதல் விமானங்கள், யுத்த தாங்கிகள் மற்றும் வேறு வகையான ஆயுத தளபாடங்கள் என்பவற்றுக்கான உதிரிப் பாகங்களை வழங்க ரஷ்யா முன் வந்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால ,சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் ரஷ்யாவிடமிருந்து இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்யக் கூடாது எனத் தெரிவித்து அமெரிக்காவால் இலங்கைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த தடை இந்தியாவுக்கு விதிக்கப்படவில்லையெனவும் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸ் பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருப்பதோடு ஏற்கனவே பொலிஸ் சேவையில் உள்ளவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் 30 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் மற்றும் தாய் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை 2020. 02.07 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு) பயிலுநர் ஆட்சேர்ப்புப் பிரிவு இல.375, 1 ஆம் மாடி ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை கொழும்பு 06 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும்.

மேலதிக விபரங்களைப் பெற நேற்று 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானியைப் பார்வையிடவும். (இ-10)

## இலங்கையர்கள் ஐந்துபேர் அவுஸ்திரேலியாவில் கைது

(சிட்னி)

இலங்கையர்கள் ஐந்து பேர் உள்ளிட்ட ஏழு பேர் அவுஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டனர்.

திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே விக்டோரியா பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மெல்பேர்ன் நகரில் நேற்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே, இவர்கள் கைது செய்யப்பட்டனர்.


கைது செய்யப்பட்டவர்களில் மூன்று பெண்களும், நான்கு ஆண்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த திருட்டுக் குழுவினர் அவுஸ்திரேலியாவின் பிரதான நகரங்களிலுள்ள புகையிரத நிலையங்கள், அங்காடித்தொகுதி உள்ளிட்ட இடங்களில் திருட்டில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இலங்கையர்களுக்கு எதிராக பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (இ-7)

## பொது மக்களுக்கு

# வரி நிவாரணம் வழங்காத நிறுவனங்கள் மீது நடவடிக்கை



(கொழும்பு)

பொதுமக்களுக்கு வரி நிவாரணம் வழங்காத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென உள்நாட்டு வருவாய் துறை தெரிவித்தது.

உள்நாட்டு வருவாய் துறையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் ஆணையாளர் நாயகம் ஜெனரல் அசோக நந்துன் குருஜே இதனைத் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கம் வழங்கிய வரி நிவாரணத்தைப் பெறாத மக்களின் புகார்கள் குறித்து விசேட விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

மேலும் ஒவ்வொரு துறையிலும் ஒரு முழுமையான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆனாலும் சில துறைகளுக்கு இந்த வரிச் சலுகை வழங்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்விடயம் தொடர்பாக தற்போது நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. இம்மாதம் 20ஆம் திகதிக்குப் பின்னரே இவ்விடயங்களில் முழுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்தே நிறுவனங்கள், வாடிக்கையாளருக்கு வரி நிவாரணம் அளித்திருக்கிறார்களா என்பது தொடர்பாக அவதானிக்க முடியும்.

இந் நிலையில் இவ்விடயம் தொடர்பாக அடுத்த சில நாட்களில் விவாதிக்கவும் நாங்கள் தயாராகவுள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# மணிவிழா வாழ்த்து

## திருமதி மாலினி பாலசுப்பிரமணியம்

(பிரதி அதிபர், யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்)



**சேவை விபரம்:**

கிளி/புலோப்பளை றோ.க.த.க. பாடசாலை
1982.04.26-1985.01.27
யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
1985.01.28-1987.12.31
யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்
1988.01.01-1988.03.06
யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்
1988.03.07-2010.06.06
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
2010.06.07-2020.01.17

எமது பாடசாலையில் கணித ஆசிரியராக, பிரதி அதிபராகப் பதவி வகித்து சேவையிலிருந்து ஓய்வு பெறும் மணிவிழா நாயகியை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(19031)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: சூரி செவ் 3 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, Canada
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10385

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, Swiss
எதிர்பார்ப்பு: Swiss PR
தொ.இ: B/10386

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: 36 ¼
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: CIMA, Accountant, Maldives
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/10387

பிறப்பு: 1966 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
உயரம்: 156cm
தகைமை/தொழில்: A/L, வியாபாரம்
தொ.இ: B/10388

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்திராடம் 1
கி.பா: 38
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.Sc (hons) , IT Officer
எதிர்பார்ப்பு:Doctor,Engineer,Accountant, Lecturer
தொ.இ: G/7003

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 47 ¼ சூரி செவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில் A/L, தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7008

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 37 செவ் 1 ல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: பட்டதாரி, அரசதொழில்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில்
தொ.இ: G/7024

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: B.Sc, Civil Engineer
எதிர்பார்ப்பு: Proffesional Qualified
தொ.இ: G/7031

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—198

# ஏர்முனை; ஒரு சஞ்சிகையின் எழுகை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 211

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இவ்வருடத்தின் பொங்கல் விழாக்கள் அனைத்தும் சிறப்பாக கலகலப்பாக நடந்து முடிந்திருக்கின்றது. மகிழ்ச்சி வெள்ளம் பொங்க மக்கள் பொங்கலைத் திருவிழாவாகக் கொண்டாடியதை அனைத்துப் பிரதேசங்களிலும் காண முடிந்தது. மனம் மகிழ்ச்சியடைந்து குதூகலித்திருந்ததையும், அனைவரும் புத்தாண்டை இன்முகத்துடன்வரவேற்றதையும்இவ்வருடம் சிறப்பாகக் காண முடிந்தது. அதேநேரத்தில் அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் புதிய வெளிச்சம் என்னும் அமைப்பின் அனுசரணையுடன் ஏர்முனை என்னும் சஞ்சிகையும் அறிமுகமாகியிருக்கின்றது. இயற்கை வழி விவசாய துணுக்குகளை உள்ளீர்ந்து வெளிவந்திருக்கும் இச்சஞ்சிகையின் 5 ஆம் இதழின் வெளிவருதலை நாமும் இப்புத்தாண்டில் வாழ்த்துவோமாக.

இயற்கைவழி விவசாயத்தினுள் தற்போது பலரும் உள்ளீர்க்கப்பட்டு வருவதனை அதனது சிறப்பாகக் காண முடிந்தாலும் இயற்கைவழி விவசாயம் என்பதன் தாற்பரியத்தை எமது முன்னையவர்களால் முத்தாய்ப்பாக சொல்லி வாழ்ந்து பார்த்து அதன் அதிசயத்தை, ஆற்றலை ஆழமாக சொல்லியிருக்கின்றார்கள். இருப்பினும் எம்மால் அந்த வாழ்க்கையை முழுமையாக ஊகிக்கவோ அல்லது வாழ்ந்து பார்க்கவோ முடியவில்லை என்பது யதார்த்தமே. ஆனால் இயற்கையுடனான வாழ்க்கை என்பது பலதையும் அனுசரித்து அனைத்து உயிரினங்களையும் இணைத்து அவரவருக்குத் தேவையானவற்றை கொடுத்து வாழும் வாழ்க்கையாகும். வர்த்தக ரீதியில் இதனை அணுகினால் இயற்கை வழி என்பது ஒரு கேள்விக்குறியே.

உலகிலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் இப்பூமித்தாயில் இருப்பு என்பது உறுதி செய்யப்படல் வேண்டும் என்னும் சூழலியலாளர்களின் தர்க்கிப்புக்கு அப்பால் அனைத்து உயிரினங்களின் சங்கமமே இந்த சூழல் தொகுதி என்பதனை நாம் மிகவும் ஆழமாகக் கவனிக்க வேண்டியதாகும்.

குடும்ப விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர வைத்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அதற்காக பத்தாண்டுகால வரையறையையும் உருவாக்கி 2019 இலிருந்து 2028 வரையான காலப் பகுதியில் இதனை முழுமையாக உணர வைக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்திருக்கின்றது. நாம் எமது பங்குக்கு என்ன செய்தோம் என்பதே இங்குள்ள முக்கிய வினாவாகும். எமது பங்களிப்பு எவ்வாறு எங்கே, எப்படி செய்யப்பட்டிருக்கின்றது அல்லது செய்யப்படுகின்றது என ஒவ்வொருவரும் ஆராய்ந்து பார்த்துக் கொள்வது நல்லது. எமக்குத் தேவையான பயிர்களை, மரக்கறிகளை, இலைக்கறி வகைகளை, பழங்களை எமது வீட்டிலுள்ள இடத்தில் வளர்த்து எமது தேவையை முதலில் பூர்த்தி செய்து கொள்வதாகும். இதனையும் தாண்டி மீதியை மற்றையவர்களுக்கு கொடுப்பது அல்லது விற்பது ஆகும். கொடுப்பது என்பது பண்டமாற்று எனப் பொருள்படும். அதுவும் ஒருவகைப் (பணப்) பரிமாற்றம் தான்.

இயற்கைவழி விவசாயத்தில் பலவிதமான நன்மைகள் கிடைப்பதை அனைவரும் அறிந்து கொள்வர். ஆனால் அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது சிரமமான காரியமல்ல என்றாலும் அனைவரும் நினைத்தால் ஒன்றிணைந்தால் செய்து காட்டலாம். முயற்சி திருவினையாக்கும் என்பதன் அர்த்தம் அதுதானே. கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் இனங்களைப் பாதுகாப்பதும் சேமிப்பதும் பயன்படுத்துவதும் அவசியமாகும். அந்த வகையில் பீடைநாசினிகள் அசேதன இரசாயனங்கள் தவிர்ந்த பயிர்ச்செய்கை எமது வீட்டில் கிடைக்கின்ற நிலப்பரப்பில் நிறைவாகவே செய்யலாம். வீட்டினை பசுமை நிறைந்த இடமாக மாற்றுங்கள்.




உளவியல் ரீதியில் பாரிய மாற்றங்களை உங்கள் வீட்டிலுள்ளவர்களுக்கு அது ஏற்படுத்தும். பசுமை என்றும் குளிர்மையானது, இதமானது இன்னும் இனியையானது. முதலில் வீட்டிலுள்ளவர்கள் மனம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியாக இருப்பவர்களுக்கு அதிக நோய் நெருங்காது என்பார்கள்.

குடும்ப விவசாயத்தில் பல்வகைப்பயிர்களை நடுகை செய்யுங்கள். குறிப்பாக மரங்களைத் தெரிந்து நடுகை செய்யலாம். உயிர்வேலிகளை பத்திரமாக பாதுகாத்துக் கொள்ளுங்கள். பணம் இருக்கின்றது என்பதற்காக கல்லாலான மதிலைக் கட்டி இயற்கையை அழித்து விடாதீர்கள். கல்லால் கட்டினாலும் பாதுகாப்பு என்பது இல்லை என்பதனையும் கவனத்திற் கொள்க. பல்வகைப் பயிர்கள் குறிப்பாக மரக்கறி, இலைக்கறி, பழமரங்களை நடுகை செய்யலாம். நிழல் மரங்களையும் தெரிவு செய்யலாம். சிறிய பழங்களை தரும் மரங்களையும் தெரிவு செய்யுங்கள். அதில் சிறிய குருவிகள், புலுனி, அணில், காகம், மைனா போன்றவை வந்தமர்ந்து அவை போடும் சங்கீத ஒலி அனைத்தையும் மறக்கச் செய்துவிடும். பறவைகளையும் விலங்குகளையும் உங்கள் வீடு தேடிவர வழி செய்யுங்கள். இனியஒலி, சத்தம், சங்கீதம் மனதிற்கு என்றும் இன்ப உணர்வையும் புத்துணர்வையும் தரும்.

இயற்கை வழிவிவசாயத்தின் தன்மையை அனைவரும் அறியச் செய்திடல் வேண்டும். அந்த வழியில் இயற்கை வழி இயக்கமும் நெடுங்கேணி அமைப்பும் இணைந்து உருவாக்கும் ஏர்முனை இன்னும் பலவாசகர்களை ஒன்றிணைக்க வாழ்த்துக்கள். வாசகர்கள் அனைத்து மட்டத்திலும் உள்வாங்கப்படல் வேண்டும். அதற்காக இன்னும் இச்சஞ்சிகை தனது உள்ளடக்கங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இலத்திரனியல் யுகமாக மாறி வரும் இக்கால கட்டத்திலும் இச் சஞ்சிகையை இலத்திரனியல் பதிப்பாக அச்சேற்றலும் விரும்பத்தக்கதாகும்.

தற்போது வெளிவரும் சஞ்சிகையில் உள்ள தவறுகள் திருத்தப்பட்டு அதிலுள்ள உள்ளடக்கத்தை சரிசெய்து பிரசுரித்தால் இச்சஞ்சிகைக்கான மதிப்பு உயரும். உள்ளூரில் எடுக்கப்பட்ட படங்களைக் கொண்டு ஆக்கங்கள் ஆக்கப்படல் நன்று. இவ்வாறான சஞ்சிகைகள் சுவாரஸ்யமாகவும் வாசிக்கத் தூண்டுவனவாகவும் அறிவை ஆழப்படுத்துவதாகவும் அமைய வேண்டும். மாணவர்களுக்கான பக்கங்களை பதிவு செய்யலாம். மூலிகைத் தாவரங்களை அறிமுகப்படுத்தலாம்.

ஏர்முனையில் குறிப்பிடப்படும் தாவரங்கள் மற்றும் பொருட்கள் எங்கே கிடைக்கும் என்னும் தகவலையும் தாவரங்கள் மற்றும் விலங்குகளை வளர்ப்பவர்கள் மற்றும் அவர்கள் தொடர்பான தகவல்களைப் பிரசுரிக்கலாம்.

ஏர்முனை வளர்ந்து வரும் விவசாயச்சஞ்சிகை. அதனது வளர்ச்சி ஆக்கபூர்வமானதுடன் ஊக்கப்படுத்தப்படவும் வேண்டும். தனது தரத்தை அது எந்தவிதத்திலும் குறைத்துக் கொள்ளாது. இன்னும் கனதியான தகவல்களுடன் அது தொடர்ந்து வெளிவர வேண்டும் என வாழ்த்துவோம்.

# ரணில் வெளியேறினால் ஐ.தே.கவுக்கு எதிர்காலம் இல்லாமல் போகாது



## சஜித் அணி திட்டவட்டம்

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியேறினால் கட்சிக்கு எதிர்காலம் இல்லாமல் போய்விடுமென நாம் நினைக்கவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.**

சிறிகொத்தாவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ரணிலை விலக்கவே பெரும்பாலான உறுப்பினர்கள் விரும்புகின்றனர்.

அத்துடன் இன்னும் சிலர் ரணில் உயிரோடு இருக்கும் வரை தலைவராக இருக்க வேண்டுமென எண்ணுகின்றனர். ஆனால் நாம் அவ்வாறு விரும்பவில்லை.

இதேவேளை தற்போது கட்சி வலுவடைந்து காணப்படுகின்றது. எனவே அதனைச் சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கும் கட்சியைத் தலைமை தாங்குவதற்கும் சிலர் உள்ளனர் என்பதை எங்களால் அவதானிக்க முடிகின்றது.

மேலும் கட்சியின் நாடாளுமன்றக் குழுவில் பெரும்பான்மையானவர்கள் இந்தக் கருத்தையே கொண்டிருப்பதால் கட்சியின் தலைவர் பதவி விலக வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம்.

அதாவது ஒரு புதிய தலைவர், ஒரு புதிய தலைமைக் குழு மற்றும் புதிய கொள்கைகளை முன்வைக்கும் வாய்ப்பை வழங்குங்கள் என்றே கோருகின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வவுனியாவில் நாடக ஆற்றுகை

(குருமன்காடு)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் வவுனியாப் பிரதேசப் பேரவையின் ஏற்பாட்டில் வவுனியா குடியிருப்பு - C.C.T.M.S. பாடசாலைக்கு முன்பாக அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் உலகப் புகழ்பெற்ற ரஷ்ய நாடக ஆசிரியர் அன்ரன் செக்கோவின் எழுத்துருவில், குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பில், சத்தியசீலனின் நெறியாள்கையில் உருவான செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் "அன்பமுதூறும் அயலார்" நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30, பிற்பகல் 3 காட்சிகளாக ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

இந்நாடகம் கடந்த வருடம் இடம்பெற்ற தேசிய நாடக விழாவில் பங்குபற்றிப் பல விருதுகளையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் அரிய வாய்ப்பைத் தவறவிடாது அனைவரையும் இந்நாடக ஆற்றுகையைக் கண்டுகளிக்க ஒன்றுகூடுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர்.(9-250)

## கிணற்றடியில் விழுந்த மூதாட்டி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றடியில் வழுக்கி விழுந்த மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியைச் சேர்ந்த சி.அன்னம்மா (வயது-70) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்றுக் காலையில் கிணற்றடிக்குச் சென்ற குறித்த மூதாட்டி விழுந்து கிடப்பதைக் கண்ட மகள் உடனடியாக மீட்டு கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்.

அவரைப் பார்வையிட்ட மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். (இ-10-114)

## மக்களை ஏமாற்றி வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன-மஸ்தான் எம்.பி.

(மன்னார்)

ஜனாதிபதி வேட்பாளராக இருந்த சஜித் பிரேமதாஸ மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே திட்டமிடாமல் வீட்டுத் திட்டங்களை வழங்கி தற்போது மக்களை சிரமத்திற்கு உள்ளாக்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் குற்றம் சுமத்தியுள்ளார்.

இன்றைய தினம் உப்புக்குளம் பகுதியில் உள்ள அவருடைய அலுவலகத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின்போது கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த வீட்டுத்திட்டம் தொடர்பான விடயங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் உரையாடியுள்ளோம். வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கியிருந்த நிதியை விட அரசியல் நோக்கத்திற்காக கண்டபடி வீட்டுத் திட்டங்களை கொடுத்துள்ளனர். திட்டமிடல் இல்லாத செயற்பாடுகளால் தான் மக்களை தற்போது மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

புதிய அரசாங்கம் என்ற வகையில் மக்களுக்கான இந் நிதியை வழங்குவதற்கான முயற்சிகளை செய்து கொண்டு இருக்கின்றோம். உயர் மட்டத்திடமும் பிரதமரிடமும் இராஜாங்க அமைச்சரிடமும் பேசியுள்ளோம்.

அவர்கள் விரைவில் ஒரு குழுவை எமது பகுதிக்கு அனுப்பி மாவட்ட ரீதியில் வழங்கப்பட வேண்டிய நிதிகள் தொடர்பாக அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன் ஆளும் கட்சி என்ற வகையில் மக்கள் எதிர்கொண்டுள்ள இப்பிரச்சினையை நிவர்த்தி செய்வது எமது பொறுப்பு என்பதன் அடிப்படையில் அவர்களுக்கான நிதியை பெற்று கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் எனவும் விரைவில் அவர்களுக்குரிய நிதியை பெற்று கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட ரீதியில் கடந்த 2019 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 85 மாதிரி கிராமங்களுக்கான 2341 வீடுகளுக்கான 1388.765 மில்லியன் ரூபாயும் 2018 ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்ட 855 வீடுகளுக்கான 105.405 மில்லியன் ரூபாவும் இன்னமும் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (9-285)

## புதிய அரசின் ஆட்சிக்காலத்தில்

# ஊடக சுதந்திரம் கேள்விக்குறி

## ஐ.தே.க.குற்றச்சாட்டு



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஊடக சுதந்திரம் கேள்விக்குறியாகும் நிலையேற்பட்டிருக்கிறது. அண்மையில் தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்களுக்கு அலரிமாளிகையில் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன் தமிழ் ஊடகங்களில் ஏன் அரசாங்கத்திற்கு எதிரான செய்திகளே வெளியிடப்படுகின்றன என்றும் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

ஊடக சுதந்திரத்தில் மேற்கொள்ளப்படும் தலையீடாகவே நாம் இதனைக் கருதுகின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்தித் சமரசிங்க சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் தற்போது படிப்படியாகக் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக ஊடக சுதந்திரம் கேள்விக்குறியாகும் நிலையேற்பட்டிருக்கிறது. அண்மையில் அரசாங்கத்தால் தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன், தமிழ் ஊடகங்கள் ஏன் அரசாங்கத்திற்கு எதிரான செய்திகளை வெளியிடுகின்றன என்றும் வினவப்பட்டிருக்கிறது. இது ஊடக சுதந்திரத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தலையீடு என்றே நாம் கருதுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக 10 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி

(கொழும்பு)

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக 10.96 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்குவதற்கு கொரிய அரசாங்கம் தீர்மானித்தது.

குறித்த தொகை இந்த வருடத்தில் வழங்கப்படும் என இலங்கைக்கான கொரிய தூதுவர் லியோன்லி தெரிவித்தார்.

குச்சவெளி சுற்றுலா வலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக 5.36 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இதன் கீழ் வழங்கப்படவுள்ளது.



மாத்தளை எடன் வல சமூக சேவை சுற்றுலா கிராம அபிவிருத்தித் திட்டத்திற்காகவும் 5.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளன. (இ-7)

# இரணைமடு நீர்த்தேக்கத்தின்

# 100 ஆவது ஆண்டில் 100 பானைகளில் பொங்கல்







(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடு நீர்த்தேக்கத்தின் 100 ஆவது ஆண்டை முன்னிட்டு 100 பானைகளிலான பொங்கல் விழாவும் இரணைமடு நூல் வெளியீடும் நேற்று இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தில் இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளன தலைவர் வி.நடராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த பொங்கல் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், நீர்ப்பாசன பொறியியலாளர் இராஜரோபு, கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் சர்வேஸ்வரா, மற்றும் கரைச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(9-100-315)



# புதுக்குடியிருப்பில் சட்டவிரோத மண் அகழ்வு; பொலிஸில் முறையிட்டவர்களுக்கு கொலை அச்சுறுத்தல்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட மருதமடு குளம் மற்றும் கள்ளவெட்டை குளங்களுக்கு அருகாமையில் பாரிய மண்ணகழ்வு இடம்பெறுவதனால், குளங்கள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இடம்பெறும் மண்ணகழ்விற்கு எதிராக பொலிஸாரிடம் முறையிட்டபோது, மணற்கொள்ளையர்களால் முறைப்பாடு செய்தவர்களுக்கு தொலைபேசியூடாக கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.**

புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்ற நிலையில், அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக மருதமடுக் குளக்கட்டின் அருகே மண் அகழ்வு இடம்பெறுவதனால், குளம் உடைப்பெடுக்கும் நிலை இருக்கின்றது.

குறித்த குளம் உடைப்பெடுத்தால், இக் குளத்தின் கீழ் சுமார் 340 ஏக்கர் வயல் நிலங்களில் விவசாயம் செய்கின்ற விவசாயிகள் பாதிப்படைவதுடன், கைவேலி, மருதமடு, ஆத்திப் பிலவு, கோம்பாவில், பாண்டியன்வெளி, தேவிபுரம் உட்பட்ட பல கிராமங்களும் நீரில் மூழ்கும் அபாய நிலை உருவாகும் எனவும் தெரிவித்தனர்.

அதேவேளை கள்ளவெட்டை குளத்தின் குளக்கட்டிற்கு அருகிலும் இவ்வாறு பாரிய அளவில் மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சட்டவிரோத செயற்பாடானது இரவு-பகலாக தொடர்ந்து இடம்பெறுவதுடன், அகழப்படும் மணல் பல கனரக வாகனங்களின் மூலம் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் செயற்பாடு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம், நீர்ப்பாசனத் திணைக்கள உதியோகத்தர், அரச உதியோகத்தர் மற்றும் மீனவ சங்கத் தலைவர் ஆகியோர் முறைப்பாடு செய்த நிலையில்,

இவ்வாறு சட்டத்திற்கு முரணாக மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள், முறைப்பாடு செய்தவர்களுக்கு தொலைபேசியூடாக கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கொலை மிரட்டல் தொடர்பில் பொலிஸாரிடம் சம்பந்தப்பட்டவர்கள் முறையிட்டபோதும், பொலிஸார் இதுவரையில் எந்தவித நடவடிக்கையினையும் எடுக்கவில்லை எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (9)

# போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 36 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

(நெளுக்களம்)

வவுனியா போக்குவரத்து பொலிஸாரின் விசேட நடவடிக்கையால் வீதி ஒழுங்குகளை மீறி வாகனம் செலுத்திய 36. சாரதிகளுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் 6 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள விபத்துக்களை கருத்தில் கொண்டு வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி திஸாநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் வாரத்திற்கொருநாள் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அந்தவகையில் நேற்று முன்தினம் வவுனியா ஏ-9 வீதியில் திடீர் சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த சோதனை நடவடிக்கையில் தலைக்கவசம் சீராக அணியாமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை, அபாயமான முறையில் வாகனம் செலுத்தியமை, வாகனம்செலுத்தும்போது தொலைபேசி பயன்படுத்தியமை, போதையில் வாகனம் செலுத்தியமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காக 36 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அவற்றில் 6 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் ஏனையோருக்கு தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகளுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக தெளிவூட்டல்களையும் பொலிஸார் வழங்கியிருந்தனர்.

(9-250-299)




# அரசால் வழங்கப்பட்ட காணிகளில் குடியிருக்காதவர்களின் காணிகளை காணியற்றோருக்கு வழங்க நடவடிக்கை

(நெளுக்குளம்)

அரச ஊழியர்களுக்காக ஓமந்தையில் வழங்கப்பட்ட காணிகளில் குடியிருக்காதவர்களது காணிகள் இரத்துச்செய்யப்பட்டு காணியற்றோருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் எம்.வீ.குரூஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் காணி அற்ற 600 இற்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு ஓமந்தை பகுதியில் காணிகள் வழங்கப்பட்டு குடியேறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும் 600 பேர் வரையில் குறித்த பகுதியில் காணிகளைப் பெற்றுக்கொண்ட நிலையில் வெறும் 80 குடும்பங்கள் மாத்திரமே அப்பகுதியில் தற்போது வாழ்ந்து வருகின்றன.

200 பேர் வரையில் பகுதியளவில் வீடுகளை அமைத்துள்ளதுடன் ஏனையோர் தமக்கு வழங்கப்பட்ட காணிகளுக்குள் எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

தமக்கு காணியில்லை என்று தெரிவித்து பலர் இங்கு காணிகளைப் பெற்றுக்கொண்ட நிலையில் மிகவும் சொற்ப அளவிலானோரே குறித்த பகுதியில் வசிக்கின்றனர். குறிப்பாக 100 இற்கும் மேற்பட்டோருக்கு வீடமைப்பு அதிகார சபையால் வீடு கட்டுவதற்காக ஐந்து இலட்சம் ரூபாய் நிதியும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளனவே தவிர அவர்கள் குடியிருக்க வரவில்லை.

எனவே அவை பற்றைக்காடுகளாக வளர்ந்து காடாக இருக்கின்றன. இதனால் மக்கள் நடமாட்டமற்ற பகுதியாக இது இருப்பதுடன் அங்கு வசிக்கும் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலான நிலை ஏற்பட்டுள்ளதாக கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் கிராம மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாகவும் தமது பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய உட்கட்டுமான வசதிகள் தொடர்பாகவும் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் மாவட்ட அரச அதிபர் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன், கடந்த மாதம் ஓமந்தை பகுதியில் பொதுமக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் உத்தியோகத்தர்களின் குறைபாடுகள் தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கனீபா வீடமைப்பு அதிகார சபைக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளதுடன், கடந்த 2 ஆம் திகதி வட மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமையவே இக்கடிதம் அனுப்பி வைக்கப்படுவதாகவும் அதில் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் எம்.வீ.குரூஸிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த பிரச்சினை தொடர்பாக தமது தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி காணிகளில் வதியாதோர் தொடர்பிலான தகவல்களை சேகரிக்கவுள்ளதுடன், வழங்கப்பட்ட காணிகளில் குடியிருக்காதவர்களது காணிகள் இரத்துச் செய்யப்பட்டு காணி அற்றோருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்படும். காணி வழங்கப்பட்டவர்களுக்கு இது தொடர்பாக அறிவித்தல்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்தார். (9-299)

## கிளி.தமிழ்ச்சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று முன் தினம் தமிழ்ச் சங்கத்தின் புதிய கட்டடத்தில் வே.இறைபிள்ளை தலைமை யில் நடைபெற்றது.


புதிய நிர்வாகிகள் தெரிவில் தலைவராக மருத்துவர் மாசிலா மணி ஜெயராசா, செய லாளராக வேதநாயகம் தபேந்திரன், பொரு ளாளராக செல்வி தியாகராசா மயூரி, மூத்த துணைத் தலை வராக நா.சோதிநாதன், துணைத் தலைவராக பொன் தில்லைநாதன், துணைச் செயலாளராக செ.தர்ம சூரியர் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டதுடன் நிர் வாகக் குழு உறுப் பினர்களாக மேலும் 14 பேர் தெரிவு செய்யப்பட்டார்கள். (9)




# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மூன்று மாதங்களில் மீள ஆரம்பிக்கப்படும்

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல நூற்றுக்கணக்கானவர்க ளுக்கு வேலைவாய்ப்பை வழங் கக்கூடிய வகையில் ஒட்டுசுட்டான் பகுதியில் இயங்கிவந்த ஓட்டுத் தொழிற்சாலை மிக நீண்டகால மாக இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

இந் நிலையில் கைத்தொழில், சிறு கைத்தொழில், அரசு முத லீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் விமல் வீரவன்ஷ நேற்று முல் லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு குறித்த ஓட்டுத் தொழிற்சாலையை பார்வையிட்ட பின்னர் இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் தொழிற் சாலை ஆரம்பிக்கப்படும் என மக்கள் மத்தியில் தெரிவித் தார். மக்கள் மத்தியில் உரையாற் றிய அமைச்சர் மேலும் தெரிவிக் கையில், 1983 ஆம் ஆண்டு தொடக் கம் மூடப்பட்டிருந்த இந்த தொழிற் சாலையின் வேலைகளை ஆரம் பிப்பதற்கு எங்களுடைய அரசா ங்கம் தீர்மானித்திருக்கிறது.

இதனூடாக இந்த பிரதேச மக்களுடைய பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவ தோடு இந்த தொழிற்சாலை ஊடாக இந்த நாட்டினுடைய பொதுமக் களுக்கான சேவைகளை வழங்கு வதற்கும் எதிர்பார்த்து இருக்கின் றோம். இதற்காக நாங்கள் புதிய தலைவர் ஒருவரை நியமித்து இருக்கின்றோம்.

இந்தப் பிரதேச மக்கள் அனை வரும் இந்த வேலைத் திட்டங் களுக்கு எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதே போன்று எதிர்காலத்தில் இதில் பழுதடைந்த இயந்திரங்களுக்கு பதிலாக ஒரு பகுதியினர் ஊடாக புதிய இயந்திரங்களை பொருத் துவதற்காக எதிர்பார்த்துள்ளோம்.

அரசாங்கத்திற்கும் மக்களுக் கும் இடையில் இடைவெளிகளை உருவாக்குவதற்கும் அதனூடாக பலன்களை அடைவதற்கும் சில தரப்புகள் செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான பயங்கரவாத குழுக் களின் செயற்பாடுகளுக்கு ஏமாற் றப்படாது எம்முடன் இணைந்து செயற்படுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (9-281)

# முள்ளியவளை பிரதேசத்தில் முறையற்ற மண்ணகழ்வு!

## கரைதுறைப்பற்று பிரதேச சபை அமர்வில் குழப்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 22 ஆவது அமர்வு நேற்று முன்தி னம் இடம்பெற்றது. அதில் கரைதுறைப் பற்று பிரதேச சபையின் அனுமதியுடன் தனியார் நிறுவனத்தால் கடந்த 9ஆம் திகதி முள்ளியவளை கயட்டையடி பிரதேசத்தில் முறையற்ற வகையில் மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் விவா திக்கப்பட்டது. இதன் போது பிரதேச சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் சி.லோகேஸ்வரனுக் கும் பிரதேச சபை தவிசாளருக்கும் இடையில் கடும் வார்த்தைப்போர் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் தவிசாளர் குறித்த மண் அகழ்வு தொடர்பில் விளக்க அறிக்கையை சபையில் முன்வைத்தார். அதாவது எமது பிரதேச சபையின் பிரதேசத்துக்குட்பட்டு கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டுவரும் இடம் நிறைந்து காணப்பட்டுள்ளது. நிறைந்து இருக்கும் குப்பைகளை கிடங்கு வெட்டி புதைக்கவேண்டிய தேவையுள்ளது. ஆனால் கிடங்குவெட்டுவதற்கு எமது ஜேசிபி இயந் திரம் பழுதடைந்துள்ளது . இந்தவகையில் எமக்கு பல வழிகளில் உதவி செய்யும் தனியார் நிறுவனத்தின் உதவியை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் ஏற்கனவே பல மயானங்களையும் பல பிரதேச சபையின் வேலைகளையும் செய்து தருபவர்கள் என்ற வகையில் முள்ளிய வளை கயட்டையடி பகுதியில் கொட்டப்படும் கழிவுகளை கிடங்கு தோண்டி புதைத்துத் தருமாறு கேட்டேன். அதன்படி எமது அனு மதியுடன் அவர்கள் அந்த வேலையை செய்து தந்தார்கள். அங்கே தோண்டப்படும் மண்ணை ஏற்றி நந்திக்கடல் கரையில் மரம் நடுவதற்கு அந்த நிறுவனத்துக்கு அனுமதி அளித்தேன்.

இதன்போது சபையில் தனது வாதத்தை முன்வைத்த உறுப்பினர் லோகேஸ்வரன், நிறுவனம் சமூக சேவை செய்து தருகின் றார்கள் என்பதற்காக பிரதேச சபையின் அதி காரங்களை விட்டுக்கொடுக்க முடியாது.

எதுவிதமான சபையின் அனுமதிகள் இல்லாது பிரதேச சபையின் ஒருவேலையை தனியார் நிறுவனத்திடம் கையளிப்பதற்கு பிரதேச சபை சட்டத்தில் இடம் இல்லை, நல்ல வேலை செய்து தருகின்றார்கள் என்பதற் காக மண்ணை ஏற்றிச்செல்ல அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றதால் சபையில் குழப்ப நிலை ஏற்பட் டது. இதனால் சபையிலிருந்து உறுப்பினர் லோகேஸ்வரன் வெளியேறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த உறுப் பினர் விஜிந்தன், தனியார் நிறுவனம் எவ்வளவோ வேலைகளை செய்து தந்திருக் கின்றது. அப்போதெல்லாம் சபை அனுமதி எதுவும் கேட்காத இவர்கள் இப்போது கதைப்பது முறையல்ல. அவர்கள் வந்து வேலை செய்து தருகின்றார்கள்.

அவர்களுடைய இயந்திரங்கள் அவர்கள் மண்ணை கொண்டுபோவதை பற்றி எமக்கு ஆட்சே பனை இல்லை. நாம் இதைப் பேசி தீர்த்திருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். தொடர்ந்து குறித்த விவாதம் முடிவுக்கு வந்தது.

கடந்த 9 ஆம் திகதி வனவளத் திணைக் களத்தின் ஆளுகைக்குட்பட்ட முல்லைத்தீவு - முள்ளியவளை கயட்டையடி காட்டுப் பகுதியில், கரைதுறைப்பற்று பிரதேச சபை யின் கழிவுப்பொருட்களை புதைப்பதாகக் காட்டிக்கொண்டு, தனியார் நிறுவனத்தி னரால் சட்டத்திற்கு முரணான வகையில் மண் அகழ்வு இடம்பெற்றது.

இதனையறிந்த வனவளத் திணைக் களத்தினர், தமது அனுமதியைப் பெறாது இவ்வாறு தமக்குரிய காட்டுப் பகுதியில், கயட்டை மரங்களை வீழ்த்தி மண்ணகழ்வு செய்வது சட்டத்திற்கு முரண் என்ற வகை யில், மண்ணகழ்வில் ஈடுபட்டவர்களைக் கைது செய்தனர்.

இந்த மண் அகழ்வு காரணமாக பாரிய குழி ஒன்று அந்தப் பகுதியில் தோன்றியுள் ளதோடு அதிலிருந்த மண் அனைத்தும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஆனால் பிரதேச சபை மரம் நடு வதற்காக கொண்டு சென்றதாக கூறுகின்ற இடத்தில் 7 லோட் மண் மாத்திரம் கொட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக் கது. (9)

## குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு



(பரந்தன்)

பொன்னகர் வேதா குடியிருப்பு, 50 வீட்டுத்திட்டம், 25 வீட்டுத்திட்டம், 17 வீட்டுத்திட்டம் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் வருடம் முழுவதும் வழங்கு வதற்கான திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழ மாலிதன், பிரதேச சபை உறுப்பினர்களான ஜீவராஜா, சிவகுமாரன் ஆகியோரே குறித்த திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

அத்துடன் பாரதிபுரம் தெற்கு பகுதி மக்கள் இரவு நேரத்தில் ஏற்படும் அசௌ கரியங்களை தடுக்கும் நோக்கில் முதற் கட்டமாக பத்து வீதி விளக்குகள் பொருத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் பாரதிபுரத்தையும் பொன்னகரையும் இணைக்கும் செபஸ் டியார் கோவில் வீதி புனரமைப்பு பணியும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (9-312)








வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் கோவிலில் தமிழ்விருட்சம், சர்வதேச இந்து இளைஞர் பேரவை, கருமாரி அம்மன் ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் மாட்டுப்பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இதன் போது ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்றதுடன், பசுமாடு அலங்கரிக்கப்பட்டு, மலர்மாலை அணிவித்து உணவுகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தம்மிக பிரியந்த, பிரபா குருக்கள் , தமிழ்மணி அகளங்கன், அந்தணர் ஒன்றியத்தினர், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், சமூகசேவை எஸ்.எஸ்.வாசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர். இதேவளை வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் மாட்டுப்பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக கொண்டாடப்பட்டன. (படங்கள்: நெளுக்குளம் செய்தியாளர்)

# பாரதம்

# குடியரசு தினத்தில் தாக்குதல் திட்டம்; வெடிபொருட்களுடன் ஐவர் கைது!



(சென்னை)

குடியரசுத் தினத்தன்று ஜம்மு-காஷ்மீரில் தாக்குதல் நடத்த முற்பட்ட ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த 5 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்டப்பிரிவு 370 பிரிவு நீக்கப்பட்டது. ஆனாலும், பாதுகாப்புப் படையினர் பணியில் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில், ஜம்மு-காஷ்மீரின் ஹஸ்ரத்பால் பகுதியில் பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது அந்தப் பகுதியில் பதுங்கியிருந்த 5 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டவர்கள் ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் குடியரசுத் தினத்தன்று பயங்கரவாதத் தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டியுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது.

அவர்கள் ஹஸ்ரத்பால் பகுதியைச் சேர்ந்த அஜிஸ் அகமது ஷேக், உமர் ஹமீத், இம்தியாஸ் அகமது, ஷாகீல் பரூக், நசீர் அகமது ஆகியோர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாதிகளிடம் இருந்து பயங்கர ஆயுதங்கள், வெடிபொருட்கள், ஜெலட்டின் குச்சிகள், டெட்டனேட்டர்கள், சற்றலைட் தொலைபேசிகள் போன்றவையும் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஜ-2)


## வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது ஜிசாட்-30

(டில்லி)

இந்தியாவின் தொலைத் தொடர்பு செயற்கைக் கோளான ஜிசாட்-30 நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

பிரான்ஸின் பிரெஞ்சு கயானாவின் கவ்ரவ் ஏவுதளத்தில் இருந்து நேற்று அதிகாலை 2.35 மணிக்கு செயற்கைக் கோள் விண்ணில் செலுத்தப்பட்டது.

ஐரோப்பிய முகமையின் ஏரியேன்-5 ரொக்கெட் மூலம் இந்த செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்பட்டது.



ஒளிபரப்பு மற்றும் தொலைத் தொடர்பு சேவைகளுக்கு பயன்படும் வகையில், இன்சாட்-4 ஏ செயற்கைக் கோளுக்கு பதிலாக இந்த ஜிசாட்-30 செயற்கைக் கோள் ஏவப்பட்டுள்ளது.

3 ஆயிரத்து 357 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக் கோள் DTH, டிஜிற்றல் சேவை உள்ளிட்டவைகளுக்கு உதவும் என இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்தார்.

15 ஆண்டுகள் இயங்கும் வகையில் இந்த செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## பல குண்டுவெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் பரோலில் விடுதலையானவேளை தலைமறைவு

(டில்லி)


இந்தியாவில் இடம்பெற்ற பல குண்டுவெடிப்புகளுடன் தொடர்புடைய குற்றவாளியான டாக்டர் பொம்ப் என அழைக்கப்படும் ஜலீஸ் அன்சாரி பரோலில் விடுதலையான வேளை காணாமல் போயுள்ளமை இந்தியாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மும்பை தொடர் குண்டு வெடிப்பு உட்பட பல குண்டுவெடிப்பு சம்பவங்களுடன் தொடர்புடைய நபரே காணாமல் போயுள்ளார்.

எம்.பி.பி.எஸ். மருத்துவரான அன்சாரி ராஜ்தானி எக்ஸ்பிரஸ் புகையிரதத்தில் குண்டுகளை வெடிக்க வைத்தமைக்காக 1994 இல் கைது செய்யப்பட்ட இவருக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்திருந்தது.

இவர் மீது வேறு பல குண்டுத் தாக்குதல் குற்றச்சாட்டுகளும் உள்ளன.

இந்நிலையில் 21 நாள் பரோலில் விடுதலையாகியிருந்த இவர் பரோல் காலம் முடிவடைவதற்கு முன்னர் காணாமல் போயுள்ளார்.



நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை தொழுகைக்கு சென்றவர் அதன் பின்னர் வீடு திரும்பவில்லை என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அன்சாரி பரோலில் விடுதலையாவதற்கு பிணை நின்ற நபரையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

குண்டு தயாரிக்கும் நிபுணத்துவத்திற்காக டாக்டர் பொம்ப் என அழைக்கப்பட்ட அன்சாரிக்கு டிசெம்பரில் நீதிமன்றம் 21 நாள் பிணையை வழங்கியது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-2)

## குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக தீர்மானம்

(டில்லி)

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக பஞ்சாப் மாநில சட்டப்பேரவையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குடியுரிமை திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற மத்திய அரசுக்கு பஞ்சாப் அரசு வலியுறுத்தி உள்ளது. இந்நிலையில் குறித்த சட்டமூலத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த சட்டத்தை திரும்பப் பெறக்கோரி கேரள சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக பா.ஜ.க. தரப்பில் பிரசார பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இதனையடுத்து குறித்த சட்டம் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் வர்த்தமானி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# சிரியா

## 40பேர் ப



சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி முதல் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்கள் படைகளுக்கும் இடையே உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. அவ்வப்போது போர் நிறுத்தங்கள் வந்தாலும், போர் முடிவுக்கு வந்தபாடில்லை.

உள்நாட்டுப்போர் முடிவுக்கு வர

## அலங்கா நல்

## சீறிப் பாயும் கா



(சென்னை)

உலகப்புகழ்பெற்ற அலங்கா நல் லூர்

## ஆஸியில் தணிந்

(சிட்னி)

அஸ்திரேலியாவில் காட்டுத்தீ பரவிய பகுதிகளில் திடீரென பெய்த மழையால் காட்டுத்தீயின் தாக்கம் குறைந்தது. மழை தீயணைப்பு வீரர்களை சற்று நிம்மதி அடைய வைத்துள்ளது.

அவுஸ்திரேலிய நாட்டில் அதன் தென் பகுதியிலும், நியூசவுத் வேல்ஸ், விக்டோரியா கடற்கரையையொட்டிய பகுதிகளிலும் கடந்த செப்டெம்பர் மாதம் முதல்




# ...ாவில் கடும் சமர்

## ...ர் பரிதாபமாக உயிரிழப்பு



(பெய்ரூட்)

**சிரியாவில் ஜனாதிபதி ஆதரவுப் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்கள் படைகளுக்கும் இடையே இடம் பெற்ற கடும் சமரில் ஒரே நாளில் 40 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

வேண்டுமானால் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள இட்லிப் மாகாணத்தை அவர்களின் பிடியில் இருந்து விடுவித்தாக வேண்டும் என்பது சிரியாவின் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் உறுதியான கருத்தாகவுள்ளது.

இந் நிலையில் சிரியாவில் கடைசியாக ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகள் மேற்கொண்ட சமரச முயற்சிக்கு பின்னர் கடந்த 12 ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஆனால் இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்துள்ள நிலையில், நேற்று முன்தினம் அங்கு இட்லிப் மாகாணத்தின் மாரெட் அல் நுமான் நகரப் பகுதிகளில் ஜனாதிபதி ஆதரவு படைகளுக்கும் கிளர்ச்சியாளர்கள் படைகளுக்கும் இடையே கடும் சமர் நடந்தது.

இந்தச் சமரில் ஒரே நாளில் இரு தரப்பிலும் சேர்த்து 40 பேர் பலியாகினர்.

கிளர்ச்சியாளர்கள் படையில் 22 பேரும், ஜனாதிபதி ஆதரவு படையில் 18 பேரும் பலியானதாக இங்கிலாந்தை தலைமையகமாக கொண்டு செயற்படுகிற சிரியா மனித உரிமைகளுக்கான கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. (ஜ-2)

# 2020 ஆம் ஆண்டின் தலைசிறந்த நாடுகள்



(வோஷிங்டன்)

கல்வி, வாழ்க்கைத்தரம், பாதுகாப்பு, பொருளாதாரம் போன்ற அம்சங்களை முன்வைத்து, தலைசிறந்த நாடுகளின் பட்டியலை அமெரிக்க செய்தி மற்றும் உலக அறிக்கை என்ற பத்திரிகை வெளியிட்டது. இதன்படி, 2020 ஆம் ஆண்டிற்கான அதன் அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள நாடுகள் வருமாறு,


இயற்கையான சூழலில் வாழக்கூடிய நாடுகள் பட்டியலில், சுவீடன் முதலிடத்திலும் சுவிட்சர்லாந்து இரண்டாவது இடத்திலும் பின்லாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளன. மிகவும் பலம் வாய்ந்த நாடுகள் பட்டியலில், அமெரிக்கா முதலிடத்திலும் ரஷ்யா இரண்டாவது இடத்திலும் உள்ளதோடு சீனா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதேவேளை, கல்வியில் சிறந்த நாடுகளாக, அமெரிக்கா முதலிடத்திலும் பிரித்தானியா மற்றும் கனடா ஆகியன முறையே இரண்டாவது, மூன்றாவது இடங்களில் உள்ளன. மேலும், தொழில் தொடங்க ஏற்ற நாடுகள் பட்டியலில், தாய்லாந்து, மலேசியா மற்றும் சீனா முறையே முதல் மூன்று இடங்களிலும் உள்ளன. பெண்களுக்கான நாடுகள் பட்டியலில், டென்மார்க் முதலிடத்திலும் சுவீடன் இரண்டாவது இடத்திலும் நெதர்லாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இதனிடையே, சிறப்பான வாழ்க்கைத்தரம் உடைய நரடுகள் பட்டியலில், கனடா முதலிடம் பெற்றுள்ளதுடன் டென்மார்க் இரண்டாவது இடத்திலும் சுவீடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. அனைத்து விதத்திலும் சிறந்த நாடுகள் பட்டியலில், சுவிட்சர்லாந்து முதலிடத்தை தக்க வைத்துள்ளதுடன் கனடா இரண்டாவது இடத்திலும் ஜப்பான், ஜேர்மனி, அவுஸ்ரேலியா, பிரித்தானியா, அமெரிக்கா, சுவீடன், நெதர்லாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் முறையே முதல் பத்து இடங்களில் உள்ளன. (ஜ-2)

# ...நல்லூரில் ஜல்லிக்கட்டு

## ...காளைகள்; அடக்கும் வீரர்கள்



ஜல்லிக்கட்டு நேற்று வழக்கமான உற்சாகத்துடன் ஆரம்பமானது.

களத்தில் சீறிப்பாயும் காளைகளை மாடுபிடி வீரர்கள் அடக்கும் காட்சியைக் காண ஏராளமான மக்கள் திரண்டுள்ளனர்.

தமிழகத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டிகள் உற்சாகத்துடனும் விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகின்றன.

கடந்த இரண்டு தினங்களாக பாலமேடு மற்றும் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு நடைபெற்ற நிலையில், நேற்று உலகப் புகழ்பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு ஆரம்பமாகியது.

இந்த ஜல்லிக்கட்டில், 700 காளைகள், 921 மாடுபிடி வீரர்கள் இதில் பங்கேற்றனர். (ஜ-2)

# புவி வெப்பமடைவதற்கு மனித செயற்பாடுகளே காரணம்

## எச்சரிக்கிறார் டேவிற் அற்றன்பரோ

(கன்பெரா)

காலநிலையில் மிகவும் நெருக்கடியான தருணம் வந்துவிட்டது. நாம் ஆண்டுதோறும் காலநிலை மாற்றம் குறித்த விடயங்களை கவனத்தில் எடுக்காமல் தள்ளி வைத்து வருகிறோம் என புகழ்பெற்ற இயற்கையியலாளரும் ஒலிபரப்பாளருமான சேர் டேவிற் அற்றன் பரோ எச்சரித்துள்ளார்.

பூமியின் வெப்பநிலை அதிகரித்து வருவதாலேயே தற்போது தென்கிழக்கு அவுஸ்திரேலியா தீப்பிடித்து வருகிறது எனவும் இந்த சம்பவத்துக்கும் உலகம் வெப்பமடைவதற்கு எந்த சம்பந்தமும் இல்லை என சில அரசியல்வாதிகள் கூறுவது வடிகட்டிய முட்டாள்தனம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மனிதச் செயற்பாடுகளின் காரணமாகவே உலகம் வெப்பமடைகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது எனத் தெரிவித்துள்ள அற்றன் பரோ இது சாதாரண விடயமல்ல, உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய விடயம் எனவும் வலியுறுத்தினார்.

இந்த நூற்றாண்டில் வெப்பநிலையை 1.5 டிகிரிக்கு மேல் உயர அனுமதிப்பது, உலகம் முழுவதும் மனித, தாவர மற்றும் விலங்குகளின் வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று உலகளாவிய காலநிலை மாற்ற நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

2015 ஆம் ஆண்டின் பரிஸ் காலநிலைப் பேச்சுவார்த்தையின் போது உலகத் தலைவர்கள்



உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பு **2C (3.6F)** ஐ விடக் குறைவாக வைத்திருப்பதற்கும், மேலும் அதை **1.5C** ஆகக் குறைக்க முயற்சிப்பதற்கும் சம்மதித்திருந்தனர்.

ஆனாலும் 2018 ஆம் ஆண்டில் வெளிவந்த ஒரு அறிக்கையில் பூமியின் வெப்பநிலையை அதிகரிப்பதை நோக்கி நகர்வது சுட்டிக்காட்டப்பட்டதுடன் இந்த வாரம் வெளிவந்த நாசா மற்றும் வானிலை அலுவலகம் உள்ளிட்ட அமைப்புகளின் ஆராய்ச்சி கடந்த தசாப்தம் மிகவும் வெப்பமானதாக அமைந்திருந்ததாகக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ...ணிந்து வரும் தீ

காட்டுத்தீ தொடர்ந்து பரவி வருகிறது.

இந்த காட்டுத்தீயில் சிக்கி இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர். ஏறத்தாழ 100 கோடி விலங்குகள் பலியாகி இருக்கின்றன. 2 ஆயிரம் வீடுகள் எரிந்து தரைமட்டமாகின. 1 கோடி ஹெக்டேயர் நிலப்பரப்பு சேதம் அடைந்தது. வெப்பத்தின் அளவும் அந்தப் பகுதிகளில் அதிகரித்து வந்தது. காற்று மாசும் பெருகியது.

இந் நிலையில் காட்டுத்தீ பரவிய



பகுதிகளில் கடந்த புதன்கிழமை திடீ ரென மழை பெய்தது.

அந்த மழை நேற்று முன் தினமும் தொடர்ந்தது. இதனால் காட்டுத்தீயின் தாக்கம் குறைந்துள்ளது. (ஜ-2)

# "குரல் பதிவுகளை வெளியிடக் கூடாது"

# ரஞ்சன் குற்றம் செய்திருந்தால் சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

(கொழும்பு)

**முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் செய்திருந்தால் உரிய வகையில் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டுமே தவிர குரல் பதிவுகளை உள்நோக்கத்திற்காக வெளியிடக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சீ. அலுவத்துவல தெரிவித்தார்.**



எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் விடயம் தொடர்பில் நாட்டு மக்கள் தெளிவாகவுள்ளனர். அது ஐக்கிய தேசியக் கட்சியின் கலாசாரம் இல்லை.

ஆகவேதான் அவர் கட்சியிலிருந்து இடை நிறுத்தப்பட்டார். அத்துடன். அவர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டும் வருகின்றார்.

அவர் குற்றம் செய்திருக்கும் பட்சத்தில் அது தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு ஏதுவாக சகல வாய்ப்பும் இந்த அரசாங்கத்திற்கு உள்ளது. அந்த வகையில் அவருடைய குரல் பதிவுகளை இவ்வாறாக வெளியிடாது சட்ட நடவடிக்கை எடுக்குமாறே அரசாங்கத்திடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம் என மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயர் நீதிமன்ற நீதிபதியாக யசந்த

## ஜனாதிபதி பரிந்துரை



(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதி சட்டத்தரணி யசந்த கோதாகொடவின் பெயரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியலமைப்பு சபைக்குப் பரிந்துரை செய்தார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு மார்ச் 28 ஆம் திகதி முதல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி யசந்த கோதாகொட கடமையாற்றி வருகின்றார்.

இதேவேளை கடந்த 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 24 ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன ஜெயவர்த்தன காலமானார். இந்நிலையில் அவரின் வெற்றிடத்துக்கே யசந்த கோதாகொடவின் பெயரை ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட பெண் மரணம்

(திகோணமலை)

திருகோணமலையில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். திருகோணமலை - இலிங்க நகர்ப் பகுதியைச் சேர்ந்த 32 வயது பீ.சத்தியம்மா என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த பெண் டெங்குக் காய்ச்சல் காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# தெற்காசியாவில் சாதனை படைத்த இலங்கை இராணுவ அதிகாரி



(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இடம்பெற்ற பாரசூட்டில் பறக்கும் போட்டியில் இலங்கை இராணுவத்தின் உறுப்பினர் சபையின் பிரதானி மேஜர் ஜெனரல் நிர்மல் தர்மரத்ன 14,500 அடி வரை பறந்து புதிய சாதனை படைத்ததாக இராணுவம் அறிவித்துள்ளது.

இதனூடாக தெற்காசியாவின் சிரேஷ்ட இராணுவ அதிகாரி என்ற பெருமையை அவர் பெற்றார்.

மேஜர் ஜெனரல் நிர்மல் தர்மரத்ன இலங்கை இராணுவத்திலுள்ள அதி சிறந்த பாரசூட் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அது மட்டும் போதுமா?

"எனக்கு இது மட்டும்தான் சேர் தெரியும். இதைத்தவிர வேறு எதுவும் தெரியாது!" என்று சொல்லிக் கொண்டே காலம் தள்ளுகிறவர்கள் ரொம்பப் பேர். அவர்களெல்லாம் கஷ்டப்பட வேண்டியிருக்கும். இருந்து விட்டு உலக அறிவு இல்லாமல் இருந்து விடக் கூடாது. அது ஆபத்து!

இதுக்காக நம்ம தாத்தா, பாட்டியெல்லாம் ஒரு கதை சொல்லுவார்களே! அதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ஒரு சமயம் அந்த நான்கு பேரும் சேர்ந்து வெளியூர் போனார்களாம். அந்த நான்கு பேரும் எப்படித் தெரியுமா?

ஒருவர் வேதாந்தி. இன்னொருவர் சங்கீத வித்துவான். மூன்றாவது ஆள் வைத்தியர். நான்காவது ஆள் ஜோசியர் இவர்கள் நான்கு பேரும் நண்பர்கள். அதனாலே சேர்ந்து புறப்பட்டார்கள்.

வழியிலே ஒரு ஊரிலே தங்கினார்கள். இருட்டிப் போய் விட்டது. அதனாலே இன்றைக்கு இராத்திரி இங்கேயே தங்கியிருந்து விட்டு நாளைக்குப் புறப்படலாம் என்று தீர்மானம் செய்தார்கள். சாப்பாட்டுக்கு என்ன செய்வது? அங்கேயே கடைத் தெருவுக்குச் சென்று சாமான்களெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து சமைத்துச் சாப்பிடலாம் என்று முடிவு செய்தார்கள். நாலு பேர் இருக்கிறதனாலேயே ஆளுக்கு ஒரு காரியமாகச் செய்லாம் என்று வேலைய்யைப் பிரித்துக் கொண்டார்கள்.

வைத்தியர் காய்கறி வாங்கப் போனார். வேதாந்தி எண்ணெய் வாங்கப் போனார். ஜோசியர் பலசரக்கு வாங்கப் போனார். சங்கீத வித்துவானுக்குச் சமைக்கிற வேலை!

எல்லாம் சரி... நடந்தது என்ன தெரியுமா? கடைத்தெருவிலே காய்கறி வாங்கப் போனாரல்லவா வைத்தியர்... அங்கே சென்று மார்க்கற்றிலே பார்த்தார். ஒவ்வொரு காய்கறியா எடுத்துப் பார்த்தார்.

இது பித்தம் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. இது வாயு உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது என்று தனித்தனியாகத் தள்ளினார். கடைசியிலே ஒன்றுமே தேறவில்லை. வெறுங்கையோடு திரும்பி வந்து கொண்டிருந்தார். எண்ணெய் வாங்கப் போனாரல்லவா வேதாந்தி...ஒரு தொன்னையிலே எண்ணெய் வாங்கினார். பேசாமல் அதை எடுத்துக் கொண்டு வர வேண்டியது தானே! முடியவில்லை... அவர் வேதாந்தி மூளை சிந்திக்க ஆரம்பித்தது.

தொன்னைக்கு எண்ணெய் ஆதாரமா? அல்லது எண்ணெய்க்கு தொன்னை ஆதாரமா? என்கிற ஆராய்ச்சியிலே இறங்கினார். என்ன ஆகிவிட்டது தெரியுமா? வாங்கிய எண்ணெய் முழுவதையும் வழியிலே கொட்டி விட்டு தொன்னையோடு வந்து சேர்ந்தார். பலசரக்கு வாங்கப் போனாரே ஜோசியர்...அவர் வழியிலே வந்தவர்களை எல்லாம் அங்கங்கே ஒரு மரத்தடியிலே உட்காரவைத்து அவர்களுக்கெல்லாம் ஆரூடம் சொல்ல ஆரம்பித்தார். அப்படி ஒவ்வொருவராகச் சொல்லி முடித்து விட்டு கடைத் தெருவுக்குப் போய்ச் சேர்ந்தார். இவர் அங்கே போய்ச் சேருவதற்குள்ளே ரொம்ப நேரம் ஆகிவிட்டது. கடையைப் பூட்டிவிட்டுப் போய்விட்டார்கள். என்ன செய்வது? இவரும் வெறுங்கையோடு திரும்பி வந்து சேர்ந்தார். சரி இவர்கள் கதைதான் இப்படி ஆகிவிட்டது.

அங்கே சமைக்கிறதுக்காக உட்கார்ந்திருந்தாரே சங்கீத வித்துவான்...அவர் கதை என்னாகிவிட்டது தெரியுமா? அங்கே அவர் அடுப்பைப் பற்ற வைத்து...உலையைக் கொதிக்க வைத்தார்...அதாவது ஒரு பானையை அடுப்பிலே தண்ணீரை ஊற்றிப் பற்ற வைத்தார். அது கொதிக்க ஆரம்பித்தது. தண்ணீர் கொதிக்கிற சத்தம் இருக்கிறது அல்லவா அது இவருக்குத் தாளம் போடுகிற மாதிரி இருக்கிறது...ஒரே குஷி... பாட ஆரம்பித்தார். பாடிக் கொண்டே உற்சாகமாக கையில் இருந்த கரண்டியாலே அந்தப் பானையைத் தட்டினார். அவ்வளவுதான். பானை உடனே உடைந்து போய்விட்டது. தலையிலே கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

எந்தத் தொழில் செய்தாலும் சரி...அதைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தத் தெரியவில்லை என்றால் ஆபத்துத்தான். அதுக்காகத்தான் இந்தக் கதை.

ஒரு படகு ஓட்டுநர் சேர்...! ரொம்பக் கெட்டிக்காரர்... படகை ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகத்தான் ஓட்டிக் கொண்டு போயிருக்கிறார். நடுக்கடலிலே நின்றதும் படகு நின்று போய் விட்டது. மோட்டாரிலே ஏதோ கோளாறு! என்ன செய்யலாம்? என்று சாரதியைக் கேட்டிருக்கிறார்கள்.

படகிலே இருந்தவர்கள் எல்லாம் கவலைப்படாதீர்கள்... ஒன்றும் பிரச்சினை இல்லை. எல்லோரும் கொஞ்சம் கீழே இறங்கித் தள்ளுங்கள். மோட்டார் ஸ்ராட் ஆகிவிடும் என்றாராம் அந்த ஆள்!.

# “இனித்தாலும் கசக்காமல் வாழ்வே இல்லை”

## ‘திலகார்ப்பணம்’ ஒரு கண்ணோட்டம்

கலாபூஷணம் எல்.திலகநாயகம் போல் அவர்களின் பத்தாம் ஆண்டு ஞாபகார்த்தமாக நல்லூர் சோமராகம் இசை மன்றம் நடத்திய திலகார்ப்பணம் என்ற இசை நிகழ்வுகளும், கலைஞர் கௌரவிப்பும், போல் சாகித்திய இசையரங்கும் வெகு சிறப்பாக அண்மையில் இடம் பெற்றது. வேண்டும் வரம் நல்கியது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் அமரர் திலகநாயகம் போல் அவர்களின் சீடர்கள், ரசிகர்கள் மற்றும் கலைஞர்கள், ஆர்வலர்கள், சமயப் பிரமுகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வட இலங்கை சங்கீத சபை மாணவர்கள் என மண்டபம் நிறைந்த இசைக் குடும்பங்களால் நிரம்பிய ஒரு தித்திக்கும் நிகழ்வாக நடைபெற்றது.

இலங்கையில் பெரும் இசைப் பணிக்கும் இசைப்புதுமைகளுக்கும், மனோதர்மத்திற்கும், சாகித்திய வார்ப்புக்கும் தொடர்ந்து இன்றுவரை நினைவு கூரப்படும் ஒரேயொரு இசைக்கலைஞன் சங்கீதபூஷணம் எல்.திலகநாயகம் போல் ஆவார். இந்தக் கைங்கரியத்தை அவரின் சிஷ்யையான சோமராகப் பொறுப்பாசிரியர் திருமதி.குமுதா உமாகாந்தனும் போல் குடும்பத்தவர்களும் அற்புதமாக்கி வருகிறார்கள். இது ஒரு உதாரணமான எடுத்துக்காட்டு. அதிலும் யாருக்கென்றால் இன்று பிரபல்யமடைந்தவர்களுக்கும் பிரபல்யமடைய நினைப்பவர்களுக்கும் தத்தம் குருவுக்குச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தையும், இதுவரை நாம் செய்யவில்லையே என்ற ஆதங்கத்தையும் மனதில் கொண்டவர்களுக்கு வசமாக்கிற்று. பத்துவருடங்கள் தொடர்ந்து செய்வதென்பது இலேசான காரியமன்று.

பிரதம விருந்தினராக, மூத்த இசைக்கலைஞர், கலாபூஷ ணம், சங்கீதபூஷணம் திருமதி நேசபூபதி அனுவை நாகராஜனும், சிறப்பு விருந்தினராக, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் இசைப் பெருமாட்டி யாக, மூத்த வயலின் இசைக்கலை ஞரும், கோப்பாய் ஆசிரிய பயிற் சிக் கலாசாலை முன்னாள் இசை விரிவுரையாளருமான, கலாபூஷணம் சங்கீதபூஷணம் திருமதி. தர்மபூபதி சிதம்பரநாதனும் கலந்து கொண்டு விழாவுக்கு இசைப் பேறு அளித்தனர்.

போல் அவர்களின் ஒரு கவிதையால் மண்டபம் அமைதியானது.

நறிபலவாய் ஓடினுமென்
கட்லே எல்லை!
மதி பலவாய்க்கூடினுமென்
விதியே எல்லை!
இருள் பாதி ஒளிபாதி
முடிவே இல்லை
இனித்தாலும் கசக்காமல்
வாழ்வே இல்லை!
கனியாத வாழ்வினிலே
நாளும் தொல்லை!
கனிவாகிக் கதையாகிக்
கதிவேறில்லை,
அலையெங்கே மோதிடினும்
ஆழிக்கு நோவில்லை,
அவனன்றி இவ்வுலகில்
எதுவும் இங்கில்லை!

இது மட்டுமா? ஏராளமான சொந்த சாகியங்களை ஸ்வர ராக தாள அமைப்புடன் மெட்டு அமைத்துப் படைத்துள்ளார். கீதம், வர்ணம், கீர்த்தனை, சௌக்க காலக்கீர்த்தனை, இராகம், தாளம், பல்லவி, தில்லானா, பதம், பக்திப்பாடல் என பல்வகை உருப்படிகளை இசை உலகுக்கு அர்ப்பணம் செய்துள்ளார். கவர்ச்சிகரமான வர்ணமெட்டுக்களுடன் கூடிய இசை உருப்படிகள் இராக ரசம் மிக்கவையாகும். இந்த உருப்படிகளை சோம இராக இசைமன்ற மாணவர்கள் இசை நயம் சொட்டுமாறு குரலிசையிலும் விரலிசையிலும் வழங்குமாறு குமுதா உமாகாந்தன் அவர்கள் பயிற்றுவித்து பேறாக்கிய விந்தையை சபையோர்கள் ஏகோபித்துப் பாராட்டினர்.

கல்வியையும் கலைப்பேறுகளையும் தர வேண்டுமென சரஸ்வதியை வரம் வேண்டும் மாணவ மாணவிகளும், வாத்திய பிருந்தாகான சங்கம இளஞ்சிட்டுக்களும், கற்றது கைமண் அளவு, கலையோ மிகப் பெரிது என்று வியந்துபாடும் இளஞ்சிறார்களும், சீரிய அறத்தை நன்றியோடு வீணையில் இயம்பிட்ட வீணாகான சஞ்சார கலாதர வித்தகர்களும் இலக்கிய உபகார மொழியான தமிழ்மொழியை வாழ்த்தும் திவ்ய குரலிசைக் குயில்களும், தமிழிசையை மெருகூட்டிய சிரஞ்சீவிகளும், திலகார்ப்பண அரங்கினைத் தவப்பேறாக்கினார்கள்.

இராமநாதன் நுண்கலைக் கழக இசைத்துறை விரிவுரையாளர், கலாநிதி சுகன்யா அரவிந்தன் இசைக்கச்சேரி, அவரது குருவாக திலகநாயம் போல் அவர்களை நிம்மதியாக வைகுந்தத்தில் நீடு வாழ நிலை நிறுத்தியிருக்கும் காரணம் போல் அவர்கள் இயற்றிய உருப்படிகளையே சபையோருக்குக் கனகச்சிதமாகப்பாடி பலத்த கரகோஷத்தைப் பெற்றுக் கொண்டார். ஒரு மணித்தியால இசையரங்கினை முகாமைசெய்த பாங்கும் பரோபகாரமும் பிரம்மாதம் . நவ ராகமாலிகா வர்ணத்திற்கும், இராகம் தாளம் பல்லவியைக் கண்ட நடையில் பாடிய விஸ்தாரத்திற்கும், அவருடைய கச்சேரி பந்தாவிற்கும் பதக்கம் சூட்டலாம்.

போலினுடைய மேடைத் தர்மமும், ஒரு விரிவுரையாளருக்குரிய சாதனை சம்பிரதாயமும் கோலோச்சுவதாய் மனோ தர்மம் ஆட்சிபுரிந்தது.!

போல் குடும்பம் புண்ணியம் செய்த பேறதனால், 2020 இலும் திலகார்ப்பணம் இசைப் பேறுகளுடன் வெல்வதாக.

கே.எஸ். சிவஞானராஜா



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நடனத்துறை விரிவுரையாளரும் கொக்குவில் புஸ்பாலயா நடனசபாவின் இயக்குநருமாகிய ரஜிதா சின்னத்துரையின் மாணவிகளாகிய வைஷ்ணவி சிவபாஸ்கரன், வைதேகி சிவபாஸ்கரன் ஆகியோரது பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் காலை 9.30 மணிக்கு யாழ். இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் கலந்து கொண்டார்.

## உழவர் திருவிழாவும் பட்டிப்பொங்கலும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி ஆவின அறவோர் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ பாலகுமாரக் குருக்களின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகர மத்தியில் உழவர் திருவிழாவும் பட்டிப் பொங்கல் நிகழ்வும் இடம்பெறும்.

சங்கத்தானை முருகன் ஆலய முன்றலில் ஆரம்பித்து விருந்தினர்கள் சகிதம் ஊர்வலமாக சாவகச்சேரி நகரை வந்தடைந்து நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கலந்து கொள்வார்.

கோ பூசை, மங்கல இசை, கௌரவிப்பு, நடனம், கவியரங்கம் மற்றும் இன்னிசைக் கச்சேரி உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறும். (இ-30)

## இலங்கையிலுள்ள கோவிலை புனரமைக்க இந்திய அரசு ஐந்து கோடி ரூபா நிதியுதவி

(டில்லி)

இலங்கையிலுள்ள சீதா கோவிலை புதுப்பிக்க மத்திய பிரதேச அரசு 5 கோடி ரூபாய் நிதி வழங்கவுள்ளது.

மேலும் இந்தக் கோவில் சீரமைப்புப் பணியை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

மத்திய பிரதேச கலாசாரத் துறை அமைச்சர் சர்மா தலைமையிலான குழுவினர் அண்மையில் இலங்கைக்கு வந்தனர்.

இவர்கள் இலங்கை ஜனாதிபதி கோட்டாபயவை சந்தித்து பேசினர். இந்தச் சந்திப்பில் சீதை இலங்கையில் சிறை வைக்கப் பட்டிருந்த நுவரெலியா பகுதியில் சீதா கோயில் உள்ளது.

இந்தக் கோவிலை மேம்படுத்த மத்திய பிரதேச அரசின் பட்ஜெட்டில் ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளோம். எனவே இதற்கான பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அமைச்சர் குழுவினர் கேட்டுக் கொண்டனர். (இ-7)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சங்க பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் செ.சந்திரசேகரம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச் செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் ஆ.கிரிதரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## 25 ஆண்டுகளுக்குப் பின் உள்நாட்டுப் பயணிகள் விமான சேவை தடைநீக்கம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் உள்நாட்டுப் பயணிகள் விமான சேவைக்காக விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப் பட்டது.

25 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இதற்கமைய விமான பயணத்திற்காக மாத்திரம் பதிவுசெய்யப்பட்ட வானூர்திகளை காலிமுகத்திடலில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் விளையாட்டுத் திடலில் தரையிறக்க முடியும் என சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்தது.

குறித்த தடை விதிக்கப்பட்டிருந்த கடந்த 25 ஆண்டு காலமாக இரத்மலானை மற்றும் பத்தரமுல்லையிலிருந்து உள்நாட்டு விமான சேவைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முகாமைத்துவ உத்தியோகத்தர்; தடை தாண்டல் பரீட்சை


(கொழும்பு)

முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் அலுவலர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாண ஏற்பாடுகளுக்கமைய தடைதாண்டல் பரீட்சை எதிர்வரும் மே மாதம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பான படிமுறை விளக்கங்களை அறிய நேற்று 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட வர்த்தமானியைப் பார்வையிடவும். (இ-10)

# இலங்கையில் விளையாட்டுத்துறைக்கு சர்வதேச தரத்தில் பல்கலைக்கழகம்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையிலுள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளின் திறமைகளை உயர்த்துவதற்கு சர்வதேச தரத்திலான விளையாட்டுப் பல்கலைக்கழகமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் திறமைகளை வெளிப்படுத்தும் விளையாட்டு வீரர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வசதிகளை செய்து கொடுப்பது இந்தப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான நோக்கமாகும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

பியகம மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்துக்கு அருகிலுள்ள பிரதேசத்தில் இந்தப் பல்கலைக்கழகம் அமைக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வவுனியா மற்றும் மடு வலய அதிபர்களுக்கு செயலமர்வு



(குருமன்காடு)

உள சமூக சேவை வழங்கலில் அதிபர்களின் திறனை அதிகரிக்கும் நோக்கில் "சமூகத்தின் ஆரோக்கியத்திற்கான சேவை" என்னும் தொனிப் பொருளில் அதிபர்களுக்கான செயலமர்வு ஒன்று நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் குடும்ப புனர்வாழ்வு நிலையம் மற்றும் வட மாகாண உளவியல் சமூகவள நிலையம் என்பவற்றின் ஏற்பாட்டில் வவுனியா, மில் வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இச்செயலமர்வு இடம்பெற்றது.

முரண்பாடு அல்லது வன்முறை கட்டமைப்பின் விளைவாக ஏற்படும் மன வடுவினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு மாகாண சமூகங்களுக்காக நடத்தப்படும் இச்செயலமர்வில், குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு உளவியல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த கல்வியை வழங்குவதன் முக்கியத்துவம், முழுமையான மன ஆரோக்கியத்தின் முக்கியத்துவம்.

மன வடு என்றால் என்ன? குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு ஏற்படும் மன வடுவின் தாக்கம் என்பன தொடர்பில் இதன்போது கருத்துரைகள் வழங்கப்பட்டன.

குறித்த செயலமர்வில் வவுனியா வடக்கு வலயம், வவுனியா தெற்கு வலயம் மற்றும் மடு வலயத்தைச் சேர்ந்த 36 அதிபர்கள் கலந்து கொண்டதுடன், வடக்கு மாகாண உளவியல் சமூகவள நிலையத்தின் உதவி முகாமையாளர் எஸ்.உதயகலா வளவாளராக கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தார். (9-250)

# சட்டவிரோத மண் அகழ்வை தடுப்பது தொடர்பில் முல்லைத்தீவில் விசேட கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பாரிய பிரச்சினையாக எழுந்துள்ள, சட்டவிரோத மண் அகழ்வைத் தடுப்பது தொடர்பில், எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றினை நடத்த வேண்டுமென நேற்று இடம்பெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், கள்ளவெட்டை, மருதமடு, பேராறு உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து இடம்பெறும் சட்ட விரோத மண் அகழ்வு தொடர்பில் மிகவும் பிரதானமாக கவனஞ் செலுத்தப்பட்டது.

இதனையடுத்து மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இந்த பிரச்சினை அதிகரித்துக் காணப்படுவதனைக் கருத்திற்கொண்டு, இது தொடர்பில் விசேடமாக கலந்துரையாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அந்த வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை அன்று மாவட்ட அரச அதிபர் தலைமையில் அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் ஒன்றிணைந்து இந்த சட்டவிரோதச் செயற்பாட்டை கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. (9)

# முதியவருக்கு இளைஞர்கள் உதவி



(யாழ்ப்பாணம்)

காரைநகர் - ஊரிக் கிராமத்தில் வசிக்கும் விசேட தேவையுடைய முதியவர் ஒருவருக்கு யாழ்ப்பாணம் கே.கே.பி.இளைஞர் கழகத்தினர் கடந்த திங்கட்கிழமை சொகுசு சக்கர நாற்காலி ஒன்றை வழங்கினர்.

அத்துடன் முதியவரின் குடும்பத்திற்கு பொங்கல் பொருட்களும் வழங்கப்பட்டன.(இ-30)

# கிளிநொச்சிக்கான குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது-சந்திரகுமார்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர்த்திட்டமானது மேலும் விரிவுபடுத்தப்பட்டு விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திர்குமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் கொழும்பில் நீர் வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையில் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின் போது இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வகையில் செருக்கன் குடியிருப்பு, காஞ்சிபுரம், வட்டக்கச்சியில் அழகாபுரி, பத்துவீட்டத் திட்டம், புதுக்காடு, கோணாவில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் காந்தி கிராமம் போன்ற பிரதேசங்கள் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளன. மக்களுக்கான சுத்தமான குடிநீர் மற்றும் வரட்சியான காலத்தில் சீரான குடிநீர் விநியோகம் என்பவற்றை கருத்தில் கொண்டு பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான பணிப்புரையை அமைச்சர் வாசுதேவ நாணக்கார அதிகாரிகளுக்கு விடுத்துள்ளார்.

அத்தோடு குடிநீருக்காக நீரை சுத்திகரித்து பெற்றுக்கொள்ளும் நிலையத்தின் தற்போதைய கொள்ளளவு போதுமானதாக இல்லாமையினால் அதனையும் மேலும் விரிவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இனிவரும் நாட்களில் நாளொன்றுக்கு அதிகளவான சுத்திகரிக்கப்பட்ட நீரை பெற்றுக்கொள்ள முடியும்.

கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உமையாள்புரம், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, கிளிநகர், கல்லாறு, மலையாளபுரம், கல்மடுநகர், இயக்கச்சி வியாகபுரம், கொற்றான்ரர்குளம் ஆனைவிழுந்தான், கரியாலைநாகபடுவான், ஜெயபுரம், பல்வராயன்கட்டு, புன்னைநீராவி, உழவனூர், நாதன்குடியிருப்பு, அறிவியல் நகர், பொன்னநகர், பாரதிபுரம், கிராஞ்சி, பொன்னாவெளி, கிருஸ்ணபுரம்,செல்வாநகர், அம்பாள்குளம், கோணாவில், ஊற்றுப்புலம், தம்பகாமம், புதுமுறிப்பு, அம்பாள்நகர் போன்ற கிராமங்களுக்கு சுத்தமான குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (9-350)






இலங்கை - ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் அபிவிருத்தி இலக்குகளுக்கான சாவகச்சேரி பிரதேச இளைஞர் சபையின் தைத்திருநாள் நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை பிற்பகல் கைதடி மின்னொளி இளைஞர் கழக மைதானத்தில் இடம்பெற்றது. அமையத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் இந்துஜாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முட்டி உடைத்தல், சங்கீதக் கதிரை உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (படங்கள்:- சுபேசன்)

# கூட்டு ஒப்பந்தம் வெறும் நாடகம் தானா?

## தொழிற்சங்க அரசியல்வாதிகளிடம் திலகராஜ் எம்.பி.கேள்வி



(ஹற்றன்)

இவ்வளவு காலம் கூட்டு ஒப்பந்தம் மூலம்தான் தீர்வு காணலாம் எனக் கூறி அதற்காகப் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்திய அதே தொழிற்சங்க அரசியல் தலைவர்கள்தான் இன்று அந்த ஒப்பந்தம் பற்றிய எந்தப் பேச்சுக்களும் இல்லாமல் அரசாங்கத்தின் ஊடாக சம்பள அதிகரிப்பை வழங்கப் போவதாக தெரிவிக்கிறார்கள். அப்படியாயின் இத்தனை காலகூட்டு ஒப்பந்தம் வெறும் நாடகம் தானா? இந்த அறிவிப்புத் தொடர்பில் கம்பனிகளின் நிலைப்பாட்டை அறியவேண்டியுள்ளது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் குறைந்த பட்ச வேதனம் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வழங்கவுள்ளதாக அரசு விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிப்பு கிடைத்தால் அது வரவேற்கக் கூடியதே. முறைப்படி 2015 மார்ச்சில் செய்திருக்க வேண்டிய கூட்டு ஒப்பந்தம் 2016 ஒக்டோபரிலேயே செய்யப்பட்டது. 19 மாதங்கள் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன்பிறகு 2018 செப்டெம்பர் செய்திருக்க வேண்டிய ஒப்பந்தம் 2019 டிசெம்பரிலேயே செய்யப்பட்டது.

எனவே ஏறக்குறைய இரண்டு வருடங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பும் வழங்கப்படவில்லை. அதற்கான நிலுவைக் கொடுப்பனவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே இப்போதைய 750 ரூபாயில் இருந்து ஆயிரம் ரூபாய் அதிகரிப்பு சாதாரணமாக கிடைத்திருக்க வேண்டியதே.

கடந்த 2018 சம்பள பேச்சுவார்த்தைகளின்போது மொத்த சம்பளமாக 950ரூபாவை வழங்க கம்பனிகள் சம்மதித்து இருந்தன. நல்லாட்சி அரசாங்கம் 50 ரூபாவை வழங்க அத்தனை ஏற்பாடுகளும் செய்து அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்த நிலையிலேயே இருந்தது. எனவே இந்த இரண்டையும் சேர்த்துத் தான் 1000 ரூபாவை என அறிவிக்கிறார்களோ தெரியவில்லை. அப்படியாயின் அது மொத்த சம்பளமே அதற்கு கம்பனிகள் பல நிபந்தனைகளையும் விதித்து இருந்தன. இப்போதைய அறிவிப்பில் அப்படியான எந்த விளக்கமும் இல்லை. ஆயிரம் ரூபா வழங்குவதற்கான பரிசீலனை அறிவிப்பாகவே உள்ளது.

ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க அரசு அறிவித்தாலும் அதனை வழங்க வேண்டிய கம்பனிகள் எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை. எனவே இதன் நடைமுறை சாத்தியம் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் கம்பனிகள் இத்தகைய அறிவிப்புக்களின்போது காட்டிய எதிர்வினைகளை நாம் மறந்து விடவில்லை. அரசாங்கம் அறிவிப்புக்களைச் செய்து நிதி ஒதுக்கீடுகள் செய்த போதும் கூட கம்பனிகள் பல்வேறு காரணங்களைக் கூறி மறுத்தன.

இந்தநிலையில் ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை அரசாங்கம் உறுதிப்படுத்த முடிந்தால் அரசாங்கமே தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக இனித் திகழவேண்டும். இடையில் கூட்டு ஒப்பந்தம் எனும் பேச்சுவார்த்தை நாடகம் அவசியமற்றது.

அதற்கான உறுதிப்பாட்டையும் அரசாங்கம் வழங்க வேண்டும்.

பெருந்தோட்டத்துறை சார்ந்த பிரச்சினை தனியே ஆயிரம் ரூபா மாத்திரமல்ல. அந்தக் கட்டமைப்பில் மலையக சமூகம் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்ட நிலைமையில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்த முறைமை மாற்றமே ஒரே தீர்வு. அதுவே எமது இலக்கு. தொழிலாளர்களை சம்பளத் தொகைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தாது அவர்களது அடிமை வாழ்வு முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் இயங்கிவரும் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் விருது வழங்கும் விழா யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.கல்லூரியின் அதிபர் தேசகீர்த்தி லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகரசபை முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட், யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வித் துறைத் தலைவர் கலாநிதி ஜெயலஷ்மி இராசநாயகம், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விமான நிலையத்திற்கு ஜனாதிபதி திடீர் விஜயம்



(கொழும்பு)

நாட்டிலிருந்து வெளியேறும் அல்லது நாட்டிற்கு வருகை தரும் அனைத்து விமானப் பயணிகளும் அசௌகரியங்களுக்கும் தாமதத்திற்கும் உள்ளாகாத வகையில் செயற்படுமாறு ஜனாதிபதி விமான நிலைய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

விமான நிலையத்தை அண்டிய பிரதேசங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பொது மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்காத வகையில் மேற் கொள்ளப்பட வேண்டுமென நேற்று முன்தினம் பிற்பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டபோது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

நாட்டிலிருந்து வெளியேறும் விமானப் பயணியொருவர் விமான நிலையத்திற்குள் நுழையும் சந்தர்ப்பத்திலிருந்து பயணிகள் நுழைவாயிலின் ஊடாக விமானத்திற்குள் பிரவேசிக்கும் மற்றும் நாட்டிற்கு வருகைதரும் விமானப் பயணியொருவர் விமான நிலையத்திலிருந்து வெளிச்செல்லும் வரையிலான காலத்தை செலவிடும் இடங்களும் செயற்பாடுகளும் இதன் போது ஜனாதிபதியின் கண்காணிப்புக்கு உள்ளாகியது.

குடிவரவு- குடியகல்வு சோதனை நடவடிக்கைகளுக்கு போதியளவிலான அதிகாரிகளை உட்படுத்தி பயணிகளுக்கு ஏற்படும் தாமதங்களை இயன்றளவு குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி குடிவரவு- குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்தார்.

விமான நிலையத்திலிருந்து வெளிச்செல்லும் மற்றும் வருகை தரும் பயணிகளுடன் ஜனாதிபதி சுமூக கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

நாட்டிற்குள் வருகை தருவதற்கும் வெளிச் செல்வதற்கும் தனித்தனியே இருவேறு தொகுதிகளை நிர்மாணிப்பதன் ஊடாக வினைத்திறனான சேவைகளை மக்களுக்கு வழங்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி புதிய பயணிகள் நுழைவாயிலின் நிர்மாணப் பணிகளைத் துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

வாடகை வாகன வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக தனியான பிரிவொன்றை நிர்மாணிக்குமாறு விமான நிலையத் தலைவர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறிக்கு அறிவுறுத்தல் வழங்கிய ஜனாதிபதி விமான நிலையத்தின் வினைத்திறனான சேவை வழங்கல் தொடர்பில் விமான நிலையத் தலைவருக்கும் ஆளணியினருக்கும் பாராட்டுத் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும்

## அரவிந்தகுமார் அறிவுரை

(ஹப்புத்தளை)

பதுளை மாவட்டத்திற்குரிய 2 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களையும் எதிர்வரும் தேர்தலில் மீண்டும் உறுதி செய்து கொள்ள வேண்டியது கட்டாயம் என பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

ஹப்புத்தளை, காகெல்ல தோட்டத்தில் தனது பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் புனரமைக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தை பாராளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம்திறந்து வைத்தார்.

இதன் பின்னர் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் பதுளை மாவட்ட தமிழ் மக்கள் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக செயற்பட்டதால் இரண்டு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைப் பெற முடிந்தது.

அதேபோல் எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் பதுளை மாவட்ட தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்துகொள்ள வேண்டியது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கலந்துரையாடலும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அவை-57, சமகால ஈழத்துப் படைப்பிலக்கியங்களில் பேசப்படாத எதிர்வுகூறல்கள் என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45மணியளவில்அல்வாய்கலையகத்தில் சாகித்தியரத்னா தெணியான் தலைமையில் இடம் பெறும்.

இதில்,காவேரி கலாமன்ற இயக்குநர் வண.பிதா.ரி.எஸ்.ஜோசுவா வருகையாளராகக் கலந்து கொள்வார். இதனைத் தொடர்ந்து ஜீவந்தி 13 ஆவது ஆண்டு மலர் வெளியீடு கிழக்கு பல் கலைக்கழக மொழித் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் செ.யோகராசா தலைமையில் இடம் பெறும்.

இதில்,கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியற் பீட விரிவுரையாளர் அ.பௌநந்தி,யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் இ. இராஜேஸ்கண்ணன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட குடும்பங்களை உள்ளீர்க்க முடிவு

## யாழில் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உறுதி





(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் முன்னாள் போராளிகள், போரினால் பாதிக்கப்பட்ட காணாமல் போன குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளை இணைப்பதற்கு மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இணக்கம் தெரிவித்தார்.

சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாக நேற்றைய தினம் யாழ்.அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்ற சமுர்த்தித் தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்ட முயற்சியாளர்களுக்குச் சிறந்த சந்தை வாய்ப்புக்களை தேசிய ரீதியில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் பெற்றுத்தர பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

யாழ்.பனை உற்பத்திப் பொருட்களை இணையத்தின் ஊடாக சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுமட்டுமல்லாது அரசாங்கத்தால் வழங்கப்படும் சமுர்த்தி வறுமை ஒழிப்பு வேலைத் திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களை முன்னேற்றுவது எமது தலையாய கடமையாகும்.

ஆவரங்கால் சமுர்த்தி அலுவலகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயலி (அப்) ஐ இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தி சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் பயனாளிகளுக்குமான பணிகளைக் குறைக்க இச் செயலி உதவும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், சமுர்த்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-2-10)

# வைத்தியர் ஷாபியின் வங்கிக் கணக்குகள் குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீவிர விசாரணை



(கொழும்பு)

வைத்தியர் ஷாபி சிஹாப்தீனின் வங்கிக் கணக்குகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் கோடிக் கணக்கில் நிதி கிடைக்கப்பெற்றமை குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குருநாகல் நீதவான் சம்பத் ஹேவாவசத்திடம் அறிவித்துள்ளது.

சந்தேக நபரான வைத்தியர் ஷாபியின் பேரிலும், அவரது குடும்ப உறுப்பினர்கள் பேரிலும் காணப்படும் வங்கிக் கணக்குகள் தொடர்பில் தகவல்கள் சேகரிக்கப்பட்டதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பில் விசாரணைக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அதிகாரி விஜித பெரேரா நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந் நிதி வைப்புக்கள் தனியார், அரச மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.விது நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில், யாழ்.பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர் மற்றும் சமூக சேவையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று 18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மாவிட்டபுரம், கீரிமலை வீதியிலுள்ள பொதுமண்டபத்தில் பணிப்பாளர் நாகேந்திரம் விஜிதா தலைமையில் இடம்பெறும்.

இதில், விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சுகிர்தன், காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கமல் அபேய ஸ்ரீ ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1949


### அனுசியா

சண்டையில் ஒருவர் தான் வெல்லலாம்...
ஆனால் சமாதானத்தில்தான்
இருவரும் வெல்ல முடியும்...!




### கமலி

நம்மை யாருக்கும் நிரூபிக்க வேண்டிய
கட்டாயம் இல்லாத வாழ்வே
ஆகச்சிறந்த பொக்கிஷம்!



### சுபாசினி

நாம் சாப்பிட்டால் நம் நாக்கு மட்டுமே
இனிக்கும்... அடுத்தவர்களைச் சாப்பிட
வைத்தால் நமது உள்ளமே இனிக்கும்



### வாணி

கொடுப்பது இறைவன் என்று உணர்ந்து
கொண்டால் கிடைப்பது எதுவும்
தாழ்வாகத் தெரியாது!



### கலை

வெற்றியின் இரகசியம்...!
புத்தகங்களை துணை கொள், உடலுழைப்பை அதிகரி, சமூகம் புறக்கணித்தவற்றை கைவிடு, குளிர் தண்ணீரில் குளி, கொஞ்சமாய் சாப்பிடு, தியானம் கைக்கொள், இரவு தூங்கும் முன் நெடுந்தொலைவு நட, உடுப்பில் வெள்ளை நிறத்தை பழக்கமாக்கு, உணவில் கீரை சேர்த்துக் கொள், எத்தனை வலித்தாலும் அழாதே... சிரி, ஆத்திரம் அகற்று, கேலிக்கு புன்னகை தா, கோபத்திற்கு மௌனத்தைக் கொடு, நட்புக்கு நட்பு செய், வேலை சொல்லித் தருபவரிடம் மிகப் பணிவாக இரு, அலட்சியப்படுத்தினால் விலகி நில், அன்பு செய்தால் நன்றி சொல், இதமாகப் பேசு

### சாந்தி

எந்தக் கவலையும் எளிதில் மறக்க முடியும்...
எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல்
பழகிடும் உறவுகளால்!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## நல்லாட்சி அரசு அறிமுகப்படுத்திய

# என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா

# கடன் திட்டம் இரத்து!




(கொழும்பு)

என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் ஊடாக கடன்களைப் பெற்றுத்தருவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் நிதி மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர். அரசியல் தேவைகளைக் கருத்திற் கொண்டு நல்லாட்சி அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப் பட்ட இக்கடன் திட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்பட்டது.

எனவே பொதுமக்கள் போலியான தகவல்களை நம்பி ஏமாற்றமடைய வேண்டாம் என அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் வசதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் தெரிவிக்கையில், கடந்த அரசாங்கத்தில் நிதியமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள் பயனற்றவையாகும்.

சாதாரண நடுத்தர மக்களுக்கு அக்கடன் திட்டங்களை எவ்வழிமுறையில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் எவ்விதமான உரிய வழிமுறைகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா கடன் திட்டத்தை குறிப்பிட வேண்டும்.

இக்கடன் திட்டத்தால் மக்கள் எவரும் பயனடையவில்லை. அரசியல் தேவைகளைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட இக்கடன் திட்டம் முழுமையாக தற்போது இரத்துச் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் ஊடாக கடன்களை பெற்றுத்தருவதாக குறிப்பிட்டுக் கொள்ளும் நிதி மோசடிக்காரர்களிடம் பொதுமக்கள் சிக்கிக் கொள்ள வேண்டாம். வியாபார நடவடிக்கைகளுக்கு கடன் தேவையாயின் இடைத் தரகர்கள் எவரது உதவியையும் நாடாமல் நேரடியாக வங்கிக்குச் சென்று உரிய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இலகுவான முறையில் கடன் பெற்றுக் கொள்வதற்கான வசதி தற்போது அரசாங்கத்தால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

தேசிய பொருளாதார அபிவிருத்திக்குச் சிறிய,நடுத்தர வர்த்தக சமூகத்தின் முழுமையான ஒத்துழைப்பைப் பெறும் நோக்கில் அவர்களை ஊக்குவிக்கும் முகமாக கடன் நிவாரணத்திட்டமொன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் சிறிய, நடுத்தர வர்த்தகர்களின் பங்களிப்பு அவசியமானதாகும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பொருளாதார வளர்ச்சி தொடர்பிலான திட்டங்கள் காணப்படுகின்றன. ஆகவே அதனை மையமாகக் கொண்டு சில சிறிய, நடுத்தர வர்த்தகர்களைப் பாதுகாப்பது மாத்திரமல்லாது அவர்களை ஊக்குவிக்கும் வகையிலான திட்டங்களை முன்னெடுக்க அரசாங்கம் பல செயற்றிட்டங்களைத் தற்போது செயற்படுத்தி வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்தின் காரணமாக தேசிய பொருளாதாரம் சடுதியாக வீழ்ச்சியடைந்தது. அதன் காரணமாக நாடு அனைத்துத் துறைகளிலும் பின்னடைவைச் சந்திக்க நேரிட்டது. அதிலிருந்து மீண்டு பொருளாதார வளர்ச்சியை 6.5 வீதத்தால் அதிகரிப்பதே இந்த அரசாங்கத்தின் இலக்காகும். அதனைக் கருத்தில் கொண்டு சிறிய,நடுத்தர வர்த்தகர்களுக்குக் கடன் நிவாரணத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

கடந்த 5 வருடங்களில் அரசாங்கத்தால் முறையான வரிக் கொள்கையொன்று வகுக்கப்படவில்லை. அதனால் சிறிய, நடுத்தர வர்த்தகர்கள் பாதிப்புக்குள்ளாகினர். அதேபோல் கடந்த அரசாங்கத்தால் சிறிய,நடுத்தர வர்த்தகர்களைப் பாதுகாத்து அவர்களுடைய பங்களிப்புடன் பொருளாதாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் எதுவும் வகுக்கப்படவில்லை.

சிறிய, நடுத்தர வர்த்தகர்களில் கடனை மீளச் செலுத்த இயலாமல் போன தரப்பினர் மற்றும் கடனை இயன்ற அளவு செலுத்தி வரும் தரப்பினரை முன்னிலைப்படுத்தி அவர்களை ஊக்குவிக்கும் வகையிலான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதற்காக கடன் நிவாரணத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்கியது.

கடன் தொகையைச் செலுத்துவதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான வட்டி அறவிடுவதை நீக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. புதிதாக அவ்வாறு கடன் தொகையைப் பெற்றுக்கொள்வோர் நம்பகரமான முறையில் செயற்பட வேண்டியது அவசியமானதாகும்.

5 வருட தவணைக்காலமாகவே இந்தக் கடன் தொகை வழங்கப்படவுள்ளது. இத்தொகை மூலம் தனியான பாவனைக்கென வாகனங்களை கொள்வனவு செய்ய முடியாது. சிறிய, நடுத்தர வர்த்தகர்களுக்கே இந்தச் சலுகை வழங்கப்படும். 2 வீதத்தால் வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்தை முன்னோக்கிய பாதையில் இட்டுச் செல்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

இந்தக் கடன் சலுகையை அவர்களுடைய ஊக்குவிப்புக்காக அரசாங்கம் வழங்குவதனால் அவர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியமானதாகும். அவர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையின் கால அளவு ஜுலை மாதம் 30 திகதி வரை நீடிக்கப்பட்டது.

சிறிய அல்லது நடுத்தர வர்த்தகரொருவர் பெற்றுக்கொண்ட கடன் தொகையில் 50 வீதத்தைச் செலுத்தி முடித்தவராயின் அவருக்கு 50 வீத கடன் சலுகையை வழங்கவும் தீர்மானித்துள்ளோம். அதேபோல் 50 வீத கடனையேனும் திருப்பிச் செலுத்த இயலாதவர்களுக்காக வட்டி வீதத்தில் 25 வீதச் சலுகையை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்தது.

வீழ்ச்சி கண்ட அவர்களது வியாபாரத்தை மீண்டும் ஆரம்பித்து அதன் ஊடாக 6.5 வீத பொருளாதார வளர்ச்சியை அடைவதே இதன் நோக்காகும். அதேபோல் அவர்களுக்கான செயற்பாட்டு மூலதனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

அடுத்தகட்ட நடவடிக்கையாக சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகள் பதிவு செய்யப்பட்ட வங்கிகளின் ஊடாக 2019.12.31 வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கான காலவகாசத்தை 2020.12.31 வரை நீடிப்பதற்கும் குறிப்பிட்ட காலப்பகுதியில் பெற்ற கடன்களை மீள் பெறும் போது பதிவு செய்யப்பட்ட வங்கிகள் கடன்களை மாத்திரம் பெறுவதற்கும் வேறெந்த வரிகளை அறவிடாமல். இருப்பதற்கும் வீழ்ச்சியடைந்த வியாபாரங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு வணிகக் கடன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நிதியமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அனுமதி கிடைக்கப் பெற்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## குளவிக் கொட்டுக்கு இலக்கான 9 மாணவர்கள் வைத்தியசாலையில்

(தலவாக்கலை)

தலவாக்கலை, கிரேட் வெஸ்டன் மலை உச்சிக்கு ஆய்வுக்காக சென்ற றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் 9 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோரில் 3 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதோடு. ஏனைய 6 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிய வருகிறது. (இ-7)



யாழ்.நகர் மைய றோட்டறிக்ட் கழகத்தின் 27 ஆவது ஆண்டு நிறைவு விழா கோண்டாவிலில் கருணாலயச் சிறுவர்களுடன் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

## அபுதாபியில் இடம்பெற்ற விபத்தில் இலங்கை பெண் உட்பட 6 பேர் பலி!

(அபுதாபி)

அபுதாபியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கைப் பெண் உட்பட 6 பேர் உயிரிழந்த நிலையில் 19 பேர் காயமடைந்தனர். நேற்று முன்தினம் காலை அபுதாபியிலுள்ள அல்ரஹா கடற்கரைக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றது.

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்தில் லொறி ஒன்று மோதியமையால் இந்த விபத்து ஏற்பட்டது. பேருந்தில் இருந்த 6 பேர் உயிரிழந்த நிலையில் 19 பேர் காயமடைந்ததாக தகவல் வெளியானது. உயிரிழந்தவர்களில் இலங்கை பெண், நேபாள நாட்டுப் பெண் மற்றும் பாகிஸ்தான் நாட்டுச் சாரதியும் உள்ளடங்குகின்றனர். ஏனைய மூவர் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 400 | 300 | 400 |
| தக்காளி | 340 | 250 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 |
| கோவா | 160 | 180 | 120 | 200 |
| கரட் | 300 | 200 | 300 | 500 |
| பூசணி | 80 | 80 | 50 | 100 |
| புடோல் | 160 | 100 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 100 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 250 | 200 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 100 |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 | 240 |
| லீக்ஸ் | 350 | 350 | 200 | 480 |
| பீற்றூட் | 200 | 200 | 120 | 200 |
| கறிமிளகாய் | 300 | 350 | 160 | 250 |
| முருங்கைக்காய் | – | 1500 | 500 | 1000 |
| போஞ்சி | 200 | 200 | 220 | 250 |
| கத்தரிதம்புள்ள | 130 | 120 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 60 | 50 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 160 | 150 | 170 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 180 | 240 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 120 | 120 | 80 |

# சிறுவர் அரங்கம்

## குவாலயபீட யானையைக் கொல்லல்



கம்சன் தனுர் யாகத்திற்கு ஏற்பாடு செய்திருந்தாலும் அதற்கு முன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரையும் பலராமரையும் கொல்வதுதான் கம்சனின் திட்டம். எனவே அவன் அடுத்த கட்ட நடவடிக்கையாக மல்யுத்தப் போட்டி ஒன்றிற்கான ஏற்பாட்டைச் செய்தான். மல்யுத்தக் களம் நேர்த்தியாகத் துப்புரவு செய்யப்பட்டு கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. போட்டி நடக்கவிருந்ததைப் பறையடித்து அறிவித்தார்கள். அரசர்கள், பிராமணர்கள், சத்திரியர்கள் என்று பல்வேறான உயர் பிரிவினருக்குத் தனியான ஆசனங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இறுதியில் கம்சன் வந்து சேர்ந்தான். அவனுடன் பல அமைச்சர்களும் பிரதானிகளும் காரியஸ்தர்களும் வந்து அமர்ந்தார்கள். கம்சன் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்தான். எல்லா ஏற்பாடுகளும் நிறைவேறியபின் சபையின் முன் தம் திறமைகளைக் காட்ட வந்திருந்த மல்லர்கள் கோதாவுக்குள் இறங்கினார்கள். அவர்கள் பிரகாசமான ஆபரணங்களையும் ஆடைகளையும் அணிந்திருந்தார்கள். அவர்களுள் பிரசித்தி பெற்ற மல்லர்களான சாணூரன், முஷ்டிகன், சாலன், கூடன், தோசாலன் ஆகியவர்களும் இருந்தனர்.

நந்தரின் தலைமையில் வந்திருந்த ஆயர்குல மக்களையெல்லாம் கம்சன் வரவேற்றான். அவர்களும் தாங்கள் கொண்டு வந்திருந்த பால் பண்டங்களைக் கம்சனுக்குப் பரிசாக அளித்துத் தத்தம் ஆசனங்களில் அமர்ந்தார்கள். காலையில் நீராடி, மற்றக் காலைக் கடன்களை முடித்துவிட்டுக் கிருஷ்ணரும் பலராமரும் தயாராக இருந்தபோது மல்யுத்தக் களத்தில் ஒலித்த பறைகளின் ஓசை அவர்களின் காதில் விழுந்தது. உடனே வேடிக்கை பார்க்க அவ்விடத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

மல்யுத்தக் களத்தை அவர்கள் அடைந்தபோது அங்குள்ள வாயிலில் குவாலயபீட என்ற மாபெரும் யானையொன்று நிறுத்தப்பட்டிருந்ததைக் கண்டார்கள். பணியாட்கள் யானையைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். வழியை மறைக்கும்படியாக வேண்டுமென்றே காவலர்கள் யானையை நிறுத்தியிருந்ததைக் கிருஷ்ணர் கண்டார். காவலர்களின் நோக்கத்தை உணர்ந்த கிருஷ்ணர் யானையைத் தாக்குவதற்கு முன்பாகத் தம் உடைகளை இறுக்கிக் கொண்டார். பின், மேகம் போல் கர்ஜிக்கும் குரலில் யானையின் காவலனிடம் கிருஷ்ணர் பேசினார்: கயவனே, வழியை மறித்தால் உன்னையும் உன் யானையையும் யமலோகம் அனுப்புவேன்.

கிருஷ்ணரால் அவமதிக்கப்பட்ட காவலன் கோபமடைந்து ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி அவரைத்தாக்கும்படியானையை ஏவினர். யானை கிருஷ்ணரை நோக்கி முன்னேறியது. அவரை நோக்கி விரைந்து வந்து துதிக்கையால் அவரைப் பிடிக்க முயற்சித்தது. ஆனால் கிருஷ்ணர் வெகு சாமர்த்தியமாக யானையின் பின்பக்கம் சென்று தப்பித்துக் கொண்டார். தன் துதிக்கைக்கு அப்பால் பார்க்க முடியாத யானையால் பின்பக்கம் ஒளிந்திருந்த கிருஷ்ணரைக் காணமுடியவில்லை. என்றாலும் அவரைப் பிடிக்கும் நோக்கத்துடன் துதிக்கையால் துளாவியது. மீண்டும் கிருஷ்ணர் விரைவாக இடம்மாறி யானையின் பிடியிலிருந்து தப்பினார். இம்முறை அவர் யானையின் வாலைப் பிடித்து இழுத்தார்.

மிகுந்த பலத்துடன் இழுத்ததால் கருடன் பாம்பை இழுத்துச் செல்வதுபோல் கிருஷ்ணர் யானையைச் சிறிது தூரம் இழுத்துச் சென்றார். கிருஷ்ணர் சிறு வயதில் கன்றுகளை வாலைப் பிடித்து இழுத்தது போல் யானையையும் வாலைப் பிடித்து அப்படியும் இப்படியுமாக இழுத்தார். அதன்பின் அவர் யானையின் முன்புறம் சென்று அதன் தாடையில் பலமாக அடித்தார். அடித்தபின் அவர் மீண்டும் யானையின் பார்வையிலிருந்து மறைந்து அதன் பின்புறமாகச் சென்று, கீழே குனிந்து, அதன் கால்களிடையே புகுந்து அதைத் தடுமாறி விழச் செய்தார்.

அவ்வாறு செய்துவிட்டுக் கிருஷ்ணர் உடனே விலகிக் கொண்டார். அவர் கீழேயே இருப்பதாக எண்ணிய யானை அவரைக் கொல்லும் நோக்கத்துடன் கொம்பை அவர் மீது பாய்ச்சியதாக எண்ணிக்கொண்டு தரையில் ஆழமாகச் செலுத்தியது. யானை மிகவும் அலைக்களிந்து கோபமுற்றிருந்தாலும் அதன் பாகன் அதை மேலும் விரட்டினான். யானை மதம் கொண்டு கிருஷ்ணரை நோக்கி ஆவேசத்துடன் பாய்ந்தது.

கிருஷ்ணர் யானையின் துதிக்கையைப் பிடித்து இழுத்தார். யானையும் பாகனும் கீழே விழுந்தபோது கிருஷ்ணர் யானையின் மீது தாவிக் குதித்து ஏறி, யானையையும் பாகனையும் கொன்றார். யானையைக் கொன்ற பின் கிருஷ்ணர் அதன் தந்தத்தை எடுத்துத் தன் தோளின் மேல் வைத்துக் கொண்டார். வியர்வைத் துளிகளும் யானையின் இரத்தத் துளிகளும் அவரின் மேனியை அழகு செய்ய, கிருஷ்ணர் ஆனந்த மயமாகக் காட்சியளித்தார். அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் கிருஷ்ணரைப் புகழ்ந்து பாராட்டினார்கள்.

## பழமொழிகள்

- கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை.
- கெடுக்கினும் கல்வி கேடுபடாது
- கோழி மிதித்துக் குஞ்சு சாகாது.
- கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது
- கெடுவான் கேடு நினைப்பான்
- கெட்டாலும் செட்டி செட்டியே, கிழிந்தாலும் பட்டு பட்டே.
- கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்.
- கேடு வரும்பின்னே, மதி கெட்டுவரும் முன்னே.
- கேட்டதெல்லாம் நம்பாதே? நம்பியதெல்லாம் சொல்லாதே?
- கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.
- கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?
- கைப்பொருளற்றால் கட்டினவளும் பாராள்
- கையாளாத ஆயுதம் துருப்பிடிக்கும்
- கையிலே காசு வாயிலே தோசை
- கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம் பேர்.
- கொடிக்கு காய் கனமா?
- கொடுக்கிறவனைக் கண்டால் வாங்குகிறவனுக்கு இளக்காரம்.
- கொடுங்கோல் அரசு நெடுங்காலம் நில்லாது.
- கொடுத்தைக் கேட்டால் அடுத்த தாம் பகை.
- கொலைக்கு அஞ்சாதவன் பழிக்கு அஞ்சான்.
- கொல்லைக் காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?
- கொள்ளிக்கு எதிர்போனாலும் வெள்ளிக்கு எதிர்போகலாகாது.

## பொது அறிவு

- திராட்சை மலரை தேசிய மலராக கொண்டுள்ள நாடு-சீனா
- கண் இல்லாத உயிரினம் மண்புழு.
- தோலினால் சுவாசிக்கும் உயிரினம் மண்புழு.
- மேல் தாடையை அசைக்கும் விலங்கு முதலை.
- மூக்கில் பல் இருக்கும் விலங்கு முதலை.
- வயிற்றில் பல் இருக்கும் உயிரினம் நண்டு.
- வயிறும் ஜீரண உறுப்பும் இல்லாத உயிர் ஈசல்.
- மைனா பறவையின் தாயகம் இந்தியா.

## விடுகதைகளும் விடைகளும்

- எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல். அது என்ன?

  **விக்கல்**

- மரத்தின் மேலே தொங்குது மலைப் பாம்பல்ல. அது என்ன?

  **விழுது**

- முத்தான முத்துகள் முற்றத்திலே காயுது. படி போட்டு அளக்கத்தான் ஆளில்லை அது என்ன?

  **நட்சத்திரங்கள்**

- அரசன் ஆளாத கோட்டைக்கு பகல் காவல்காரன் ஒருவன், இரவுக் காவல்காரன் ஒருவன் அவர்கள் யார்?

  **சூரியன், சந்திரன்**

- நான் பார்த்தால் அவன் பார்ப்பான், நான் சிரித்தால் அவன் சிரிப்பான் அவன் யார்?

  **முகம் பார்க்கும் கண்ணாடி**

- பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்தவாய் அவள் யார்?

  **கிளி**

ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லா விட்டால் அந்த ஆற்றல் மதிப்பற்றதாகி விடும்..

– நெப்போலியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அவர்களை இடமாற்றி தமிழர்களை நியமியுங்கள்

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்தேன். அங்கு மின் இணைப்பு வேலையில் சிலர் ஈடுபட்டிருந்தனர்.

அதில் நின்ற சாரதி ஒருவரிடம் நீங்கள் எந்த இடம் என்று கேட்டேன். அவர் களுத்துறை என்றார்.

இஃதென்ன, வடபகுதியில் உள்ள தமிழ் இளைஞருக்கு சாரதி நியமனத்தை வழங்காமல், களுத்துறையைச் சேர்ந்த ஒருவருக்கு அந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதனைக் கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு செய்துள்ளது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடபகுதியில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குங்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் கேட்கவில்லை.

இவ்வாறு கூறியவர் இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே.

அவர் கூறிய மேற்படிவிடயம் பற்றி இவ்விடத்தில் பல தடவைகள் பிரஸ்தாபித்திருந்தோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை மின்சார சபை, நிலஅளவைத் திணைக்களம், வனபரிபாலனத் திணைக்களம் என எங்கும் சிங்கள இளைஞர் யுவதிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசு நியமனம் வழங்கியதென்பது முற்றிலும் உண்மையான விடயம்.

எனினும் இதுதொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பைத் தெரிவிக்காமல் மௌனமாக இருந்துவிட்டது.

வடக்கு கிழக்கில் ஆயிரம் விகாரைகள் அமைப்பதற்குத் தலையாட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்கும் உடன்பட்டது என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

ஆக, தமிழர் பகுதிகளில் தமிழர்களுக்கு நியமனங்கள் வழங்குங்கள் என்று கேட்க முடியாத அளவில், நம் தமிழ் அரசியல் தலைமை இருந்தது எனும்போது அதற்குள் இருக்கக் கூடிய சூக்குமம் என்ன என்பது புரிதற்குரியது.

சரி, நடந்ததை பேசிப் பயன் இல்லை. மாறாக நடந்த சதி வேலையைச் சீராக்கம் செய்வது தான் தேவையான விடயம்.

எனவே கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் தமிழர் தாயகத்தில் உள்ள அரச வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை, உடனடியாக தென்பகுதிக்கு இடமாற்றம் செய்வதுடன் அவர்களின் இடங்களுக்குத் தமிழ் இளைஞர் யுவதிகளை நியமிக்க வேண்டும்.

இதனைச் செய்யாதவிடத்து; தமிழர் பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்களில் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டதன் காரணமாக ஆளணி வெற்றிடங்கள் முழுமைப்பட்டுள்ளது.

எனவே தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு அரச அமைப்புகளில் வேலைவாய்ப்பை வழங்குவது முடியாத காரியமாகிவிடும்.

அதிலும் குறிப்பிட்ட அரச அமைப்புக்களில் உள்ள சாரதிகள் மற்றும் ஊழியர்கள் தென்பகுதியைச் சார்ந்தவர்களாக இருப்பதன் காரணமாக சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் பெரும்பான்மை இனத்துக்குச் சார்பாகச் செயற்படுகிறது என்ற குற்றச்சாட்டும் உண்டு.

இதற்கு நல்ல உதாரணம் தொல்பொருள் திணைக்களம்.

எனவே இது விடயத்தில் புதிய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, தமிழ் இளைஞர்களுக்குக் கிடைக்க வேண்டிய வேலை வாய்ப்பை அவர்களுக்கே வழங்க வேண்டும்.

# தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களை குறைக்க அரசாங்கம் சதி செய்கின்றது

### ரிஷாத் பதியுதீன் குற்றச்சாட்டு

(மன்னார்)

தமிழ் மக்களுடைய வாக்குகளைப் பிரிக்கவும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் குறைப்பதற்குமான சதியை புதிய அரசாங்கத்தின் முகவர்கள் மாவட்ட ரீதியாக செய்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "சிறுபான்மை மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டிய ஒரு தேர்தலாக வரும் பொதுத் தேர்தல் இருக்கின்றது.

புதிய அரசாங்கத்தின் வருகையோடு இனவாதத்தையும் மதவாதத்தையும் கக்கி அதனை மூலதனமாகக் கொண்டு அரசியல் செய்கின்றவர்கள், சிறுபான்மையினருக்கான பல்லாண்டு காலமாக இருந்து வருகின்ற உரிமைகளைக் கூட இல்லாமலாக்க வேண்டும் என்று பேசி வருவதை நாங்கள் பார்க்கிறோம்.

அதேபோல், இன்னும் ஒரு சிலர் இந்த நாட்டிலே ஜனநாயக அரசியலுக்குள் வந்த சிறுபான்மைக் கட்சிகளை எல்லாம் ஒழித்துக்கட்ட வேண்டும் எனவும் கங்கணம் கட்டியுள்ளனர்.

இவ்வாறான நிலை இந் நாட்டிலே சிறுகட்சிகளையும் சிறுபான்மை சமுதாயத்தையும் ஜனநாயகத்தை நம்பி வாழ்கின்ற மக்களுடைய எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்குகின்ற ஒரு சதியாகவே நாங்கள் பார்க்கிறோம்.

எனவே எதிர்காலத்தில் ஒரு இனக்கலவரம் வந்து விடாமல் எல்லோரும் சகோதரத்துவத்துடனும் சமாதானமாகவும் எல்லா உரிமைகளும் பெற்று வாழ்கின்ற ஒரு நிலை வரவேண்டுமாக இருந்தால் அடுத்த தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டிய தேவை இருக்கின்றது" என்று தெரிவித்துள்ளார். (ம-3)

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொலநறுவை மாவட்டத்தில்

### மைத்திரி களமிறங்குகின்றார்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலநறுவை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், இம்முறை அனைத்து மாவட்டங்களிலும் சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாகவும் அவர்களுக்கான நன்னடத்தை கோட்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலுக்காக கற்ற, ஆளுமையுள்ள பலர் விண்ணப்பித்துள்ளதாகவும் அவர்களை தெரிவு செய்வதற்காக பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பொதுக்கூட்டம்

யா/இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 2020ம் ஆண்டிற்கான பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தலைவரின் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-3)

# ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு விஜயம் செய்யுமாறு

### ஜனாதிபதி கோட்டாவுக்கு அழைப்பு

(கொழும்பு)

அபுதாபி அரசின் முடிக்குரிய இளவரசர் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஆயுதம் தாங்கிய படைகளின் பிரதித் தலைவர் ஷேக் மொஹமட் பின் சயிட் அல் நஹ்யன் (Sheikh Mohammed bin Zayed Al Nahyan) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்த வேண்டுமென்ற தனது எதிர்பார்ப்பினை உறுதிப்படுத்தும் அதேவேளை, ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு வருகைத் தருமாறு முடிக்குரிய இளவரசர் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார். (ம-3)

# நொதேண் வி.கழகத்தின் தைப்பொங்கல் விழா - 2020

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சனசமூக நிலைய முன்னாள் உறுப்பினர்களின் அனுசரணையுடன் நொதேண் விளையாட்டுக் கழகமும் கல்வியங்காடு நல்லூர் நண்பர்களும் இணைந்து நடாத்தும் வருடாந்த மரபியல் தமிழ்த் தைப்பொங்கல் விழா - 2020 இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக் கிழமை, எதிர்வரும் 25 மற்றும் 26ம் திகதிகளில் செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

குறிப்பிட்ட தினத்தில் துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், கால்ப்பந்தாட்டம், மரதன் ஓட்டம், தாச்சி மறித்தல், கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், தலையணைச்சமர், சிறுவர் நிகழ்ச்சிகள், இன்னிசை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளது. (ம)

# 28 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றால் தண்டப் பணம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் சட்டங்களை மீறிய 28 வர்த்தகர்களுக்கெதிராக இரு வேறு நீதவான் நீதிமன்றங்களினால் நேற்றைய தினம் 1 இலட்சத்து ஐந்தாயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

பாவனையாளர் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் பருத்தித்துறை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது பாவனையாளர் சட்டங்களை மீறும் வகையில் செயற்பட்ட பதினொரு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதன் விளைவாக 54 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

அதே போல் மல்லாவி நீதவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போது 17 வர்த்தகர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 51 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ம-3,10)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### இறைவனை நினைப்பதே ஆனந்தம்



இறைவனைப் பற்றி யார் பேசுகிறார்களோ அவர்களைப் பக்தன் தன் நண்பர்களாக நினைக்கிறான். பிறவற்றைப் பேசுபவர்களை விரோதியாகக் கருதுகிறான். இந்த நிலைக்கும் மேலானதொரு நிலைமை உயரிய அன்பைப் பக்தன் அடைகிறான்.

இந்த இறை அன்பினால் தன் வாழ்வே இன்பமயமாகவும் வாழத் தகுந்ததாகவும் விளங்குகிறது என்று கருதும்நிலை உருவாகும்போது மேலானதொரு அன்பை அவன் அடைகிறான். இந்த அன்பு இல்லாமல் அவனால் ஒரு நொடி கூட உயிர்வாழ முடியாது. வாழ்க்கை இன்பமயமாகத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் அங்கு இடைவிடாமல் இறைவனை நினைக்க முடிவதால் தான்.

பக்தி சாஸ்திரப்படி பக்தன் ஒருவன் முழுமை நிலையை அடைகிறான். அதாவது இறைவனுடைய அருட்காட்சி கிடைத்ததும் அவனுடைய திருவடித் தாமரைகளை தீண்டப் பெற்றதும் இறைவன் ஒருவனுக்கே தான் சொந்தம் என்ற பெருநிலையை அடைகிறான்.

இந்த நிலையை அடைந்ததன் பயனாக பக்தன் முற்றிலும் தூயோனாக மாறிவிடுகிறான். இதன்மூலம் வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறி விடுகிறது என்றாலும் பக்தர்களில் பலர் இறைவனை வழிபடுவதற்கென்றே உலகில் வாழ்ந்து வருகிறார்கள். இதுவே ஆனந்தம்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**ஓர் இல்லத்தின் உன்னத அலங்காரம் என்பது அது விருந்தினர்களால் நிறைந்திருக்கும் போது தான் நிகழ்கிறது. சில சமயம் சில மணிநேரமே வந்திருந்த விருந்தினர்களால் அது பலகாலம் அலங்கரிக்கப்படுகிறது. -ஸ்கொட்லாந்து**

# பரபரப்பானது மைதானம்; இறுதிக்கு தெரிவானது பாடும்மீன்




யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ்.பாடசாலைகளின் விளையாட்டு சங்கம் நடத்திய உதைபந்தாட்ட தொடரின் முதலாவது அரையிறுதி கடந்த 16 ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மாலை 6.30 மணியளவில் நடைபெற்றது.

இப் போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியினை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலார் அணி மோதியது. முதல் பாதி ஆட்டத்தின் போது இரு அணியினரும் ஒன்றையொன்று விட்டுக் கொடுக்காது எந்தவித கோல்களும் பெறவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் போது காண்ட் போலின் உதவியுடன் நீக்கிலஸ் அணி ஒரு கோலினை பெற ஆட்டம் பரபரப்பான உச்சக்கட்டத்தை அடைந்து பாடும்மீன் அணியினர் வேகமான ஆட்டத்தை ஆரம்பித்தனர். ரசிகர்களின் கரகோஷம் மேலெ முந்தவாரியாக எழ ஒரு கோலினை பெற்று ஆட்டம் சமநிலையில் முடிவு பெற வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் பாடும்மீன் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது குருநகர் பாடும்மீன் அணி. (க-106)

# இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது நாவாந்துறை சென்.மேரீஸ் அணி



யாழ்.லீக்கின் அனுமதியுடன் யாழ்.பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து நாவாந் துறை சென். மேரிஸ் அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒருகோலை பெற்றமையால் வழங்கப் பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 03:01 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

# அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது மன்னார் இருதயநாதர் அணி



மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் நானாட்டான் டைமன்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் தனது 45வது ஆண்டினை முன்னிட்டு நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் எமில்நகர் இருதயநாதர் அணியை எதிர்த்து விடத்தல்தீவு நண்பர்கள் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:00 என்ற கோல் கணக்கில் இருதயநாதர் அணி வெற்றி பெற்றது. இருதயநாதர் அணி சார்பாக பிறின் 02 , நியூட்டன் , அஜய் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக்கொடுத்தனர். (க)

# காலிறுதிக்குள் நுழைந்தது விடத்தல்தீவு ஐக்கியம் அணி



மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் நானாட்டான் டைமன்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் தனது 45வது ஆண்டினை முன்னிட்டு நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்று தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நானாட்டான் டைமன் ஸ்ரார் B அணியை எதிர்த்து விடத்தல் தீவு ஐக்கியம் அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 05:00 என்ற கோல் கணக்கில் விடத்தல் தீவு ஐக்கியம் அணி வெற்றி பெற்றது. (க)

# கிளி.சதுரங்கச் சங்கத்தின் சதுரங்கச் செயலமர்வு

கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடத்தவுள்ள சதுரங்கப் போட்டியின் முன் ஆயத்தமாக **Global Chess Kids** அனுசரணையில் சதுரங்கப்பயிற்சி செயலமர்வொன்றை இன்று 18 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர் 077 034 4254 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (க)




**தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியின் பிரதான நிகழ்வாக மாபெரும் வீதியோட்ட நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இப்போட்டியானது ஆண்கள்,பெண்கள் பிரிவாக நடைபெற்றது.ஆண்களிற்கான வீதியோட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரி முன்றலில் இருந்தும் பெண்களிற்கான வீதியோட்டம் யா/மல்லாகம் மகா வித்தியாலய முன்றலில் இருந்தும் யூனியன் கல்லூரி கொக்குவில் இந்துக்கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். இந்நிகழ்வில் நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. வெற்றியீட்டிய மாணவர்களிற்கான பரிசில்கள் கல்லூரியின் பழைய மாணவன் பிரசாத் ஞாபகார்த்தமாக ஆதியின் அனுசரணையோடு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.** (க)




## மைத்துனரை...

நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் நேற்று தீர்ப்பளித்தார்.

2016ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி குப்பிளான், சமாதி கோவிலடியில் சீவரத்தினம் ஜீவராஜ் (வயது-38) என்பவர் அவரது மைத்துனர் ரத்தினம் நகுலேஸ்வரன் என்பவரால் கோடரியால் வெட்டப்பட்டார்.

மார்பில் கோடரி பாய்ந்ததால் படுகாயமடைந்த சீவரத்தினம் ஜீவராஜ் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி 3 நாட்களின் பின் அவர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் ரத்தினம் நகுலேஸ்வரன் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற சுருக்கமுறையற்ற விசாரணையின் கட்டளையின் அடிப்படையில் எதிரிக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டை முன் வைத்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 2019.07.15 ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் இடம்பெற்று வந்தது.

வழக்குத் தொடுனர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன், சாட்சிகளை நெறிப்படுத்தினார். எதிரி சார்பில் அரச செலவில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி சிவலிங்கம் ரிஷிகேசன் முன்னிலையானார்.

உயிரிழந்தவரின் மனைவி உள்ளிட்ட சிவில் சாட்சிகள், பொலிஸ் சாட்சிகள் மற்றும் நிபுணத்துவ சாட்சி நிறைவடைந்த நிலையில் மேல் நீதிமன்றினால் வழக்கு தீர்ப்புக்காக நேற்று நியமிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் வழக்கு தீர்ப்புக்காக நேற்று அழைக்கப்பட்டது. எதிரி மன்றில் முன்னிலையானார்.

"இரண்டு தரப்புக்கும் ஆறாத பகை காணப்பட்டிருந்த போதும் சம்பவ தினத்தன்று மாலை மங்கிய வேளையில் திடீரென ஏற்படுத்தப்பட்ட தர்க்கத்தின் பேறாக உணர்ச்சிவயப்பட்டு, தன்னிலை மறந்து, தம்மை பாதுகாக்க வேண்டிய நிமிர்த்தம் எதிரி செயற்பட்டிருப்பதாக அளிக்கப்பட்ட விளக்கம், அனைத்து சாட்சியங்களின் தொகுப்பின் போதும், பகுப்பின் போதும் தெளிவாகின்றது. இந்த வகையில் எதிரி இறந்தவரை கொலை செய்யும் நோக்குடன் செயற்பட்டிருக்கவில்லை என மன்று கொள்கின்றது.

எனவே சீவரத்தினம் ஜீவராஜை கொலை செய்யவேண்டும் என்ற நோக்கம் எதிரியிடம் காணப்பட்டதாக எண்பிக்கப்படாத நிலையில், எதிரி தண்டனைச் சட்டக்கோவை 296 ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என்ற குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

எனினும் சீவரத்தினம் ஜீவராஜ் என்பவருக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியமையால் குறைந்த குற்றச்சாட்டாகிய கொலையாகாத குற்றத்துக்கிடமான மனித உயிர் போக்கல் என்ற குற்றத்தை இழைத்தமையினால் தண்டனைச் சட்டக்கோவை 297ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய தவறிழைத்த தான குற்றச்சாட்டுக்கு எதிரி குற்றவாளியாக மன்றினால் காணப்படுகிறார்" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் தீர்ப்பளித்தார்.

குற்றத்துக்கு எதிரிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து மேல் நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பளித்தது. (ம-3)

## விமானப் படை...

வித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று வெள்ளிக்கிழமை சீனன் குடா விமானப்படைத் தளத்தில் பயிற்சியை முடித்த விமானப்படை வீரர்களின் வெளியேற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கு அல்லது முற்றாக அழிப்பதற்கு எமது விமானப்படையின் பங்களிப்பு போற்றத்தக்கது.

இலங்கையின் வட கிழக்கில் குறிப்பாக வன்னியில் புலிகளின் இலக்குகளை அழிப்பதற்கு எமது விமானப்படை பெரிதும் எமக்கு உதவியது. அதன் மூலமே எமக்கு புலிகள் கைப்பற்றியிருந்த நிலங்களை மீட்க முடிந்ததுடன் மக்களையும் காப்பாற்ற முடிந்தது.

கமரா பொருத்தப்பட்ட விமானங்களின் உளவுத் தகவல் மற்றும் தாக்குதல்கள் மூலம் விடுதலைப் புலிகளை எங்களால் இலகுவாக தோற்கடிக்க முடிந்தது.

உலகில் உள்ள எந்த பயங்கரவாதிகளிடமும் விமானப்படை இருந்ததில்லை. இதில் விடுதலைப் புலிகள் அனுபவசாலிகள். சிறிய விமானங்களைப் பயன்படுத்தி மிகப் பெரிய அழிவுகளை ஏற்படுத்த முனைந்தவர்கள். அவர்களை எங்களால் தோற்கடிக்க முடிந்தது. இதற்கு விமானப்படை குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருந்தது.

அந்தக் காலங்களில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை குரும்பட்டித் தாக்குதல்கள் எனக் குறிப்பிடுவதுண்டு. அந்த குரும்பட்டித் தாக்குதல்களை புலிகள் இரவு வேளைகளில் கரையோரமாக தாழப்பறந்து வந்து மேற்கொண்டனர்.

அந்தக் குரும்பட்டித் தாக்குதல் மூலம் கொலன்னாவ பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம், கட்டுநாயக்க விமான நிலையம் போன்றவற்றில் பெரும் சேதங்களை ஏற்படுத்த முனைந்தனர். ஆனால் எமது விமானப்படை அதனை முறியடித்தனர். எங்களுக்கு பெருமை சேர்த்தனர்" என்று குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பொதுமக்கள்...

பட்டுள்ளதாவது,

சகல அரச நிறுவனங்களிலும் காணப்படும் தரவுகள் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனத்தின் முழுப் பங்களிப்புடன் ஒன்று திரட்டப்படும். மக்களுடன் மிக நெருக்கமாக செயற்படும் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் முன்னுரிமையளித்து இத்தரவு வலையமைப்பு உருவாக்கப்படும்.

இந்த புதிய முறையில் தொழிநுட்பம் மற்றும் இணைய வழி பாவனையினூடாக அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு, பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களை பதிவு செய்தல் மற்றும் அரச காணி உறுதிகள் உள்ளிட்ட பல துறைகளில் உடனடி சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தரவுகளை ஒரே வலையமைப்பில் கொண்டு வருவதனூடாக நேரத்தை மீதப்படுத்தி வினைத்திறனின்மை மற்றும் ஊழல் ஆகியவற்றைத் தடுக்க முடியுமென்பதை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம-3)

## அமைச்சர் விமல்...

வேலி கைத்தொழில் பேட்டைக்கு நேற்று வெள்ளிக்கிழமை விஜயம் செய்த அவர், அங்கு இடம்பெற்றுவரும் காகித உற்பத்தி, மரக்கறி எண்ணெய் உற்பத்தி ஆகிய உற்பத்தி நிலையங்களை பார்வையிட்டார்.

இதன்போது, கைத்தொழில் பேட்டையில் பணிபுரிவோர் தொழிற்சாலையை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடினார்.

இதேவேளை, யாழ்ப்பாணம், கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்துக்கும் அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அங்குள்ள பிரச்சினைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். (ம-3)

## ஐ.நா சபையின்...

சபையின் உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு ஐ.நா பிரதிநிதி இணக்கம் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினை பற்றியும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. குறித்த குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயன்முறையொன்றினை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தமது அரசியல் அபிலாஷைகளுடன் முரண்பட்டுள்ளமையினால் தமிழ் அரசியல்வாதிகள் அந்த நடவடிக்கைகளை நிராகரித்துள்ளபோதிலும், பாதிப்புக்குட்பட்டுள்ள குடும்பங்களின் நலனுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-3)

## சஜித் பிரேமதாஸ...

மளவானோர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். (ம-3)

## கதிரையை காப்...

தெரிவிக்க ரணில் திட்டமிட்டுள்ளார்.

கட்சியின் தலைவர் பொறுப்பை ஏற்று, கட்சியின் பாராளுமன்ற தேர்தல் பிரசாரத்தை வழிநடத்தவும் கேட்டுக் கொள்ளப்படவுள்ளார்.

கட்சியின் தலைவர் பொறுப்பு கருவிற்கு வழங்கப்பட்டால், பௌத்த சிங்கள வாக்குகளை கவர முடியுமென ரணில் தரப்பு திட்டமிடுகிறது. (ம-3)

## ஒற்றையாட்சிக்...

தில் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபியில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கு - கிழக்கு இணைந்த தமிழரின் தாயகம் அங்கீகரிக்கப்படல் வேண்டும், தமிழரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும், தமிழ்த் தேசமும் அதன் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்துகின்றோம். மேற்படி கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தி இவ்வாண்டு இறுதிக்குள் மாபெரும் மக்கள் எழுச்சி நிகழ்வை இப் பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கவுள்ளோம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,18)

## சந்திரிகா நீக்கம்...

நாயக்க அத்தனகல்ல தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர நேற்று இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழு கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-3)

## தேர்தலில்...

யின் புதிய தலைமைத்துவம் தொடர்பில் 2022 ஆம் ஆண்டின் பின்னர் கருத்தில் கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் தெரிவித்ததாக ஹர்ச டி சில்வா எம்.பி. தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார். (ம-3)


மெகா பவர்
திகதி 2020/01/17
சீட்டிழுப்பு இலக்கம் 0486
F 26 06 32 49 60

மஹஜன சம்பத
திகதி 2020/01/17
சீட்டிழுப்பு இலக்கம் 4094
Y 6 3 3 3 8 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 17-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2364
S 04 28 56 77

தன நிதானய
திகதி - 2020.01.17
சீட்டிழுப்பு இலக்கம் - 253
F 08 30 44 74

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 855
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.01.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,449,205/-
வெற்றி இலக்கங்கள் 29 31 39 51 C

U 02 21 52 80
சீட்டிழுப்பு வாரம் 547
17.01 2020 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,927,460
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 17/01/2020 வெற்றி வாரம் 2741 வர்ணம் கருநீலம்
வெற்றி இலக்கங்கள் கன்னி 05 30 52 57
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000
2020/01/18 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 315
சீட்டிழுப்பு திகதி 17.01.2020 சிவப்பு
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 11 49 69 விதி எண் 8
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 50,242,472
2020/01/22 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550*/= Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
(C-8785)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240
V2 TRAVELS



சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.



(C-8786)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(1873)

021 222 8093
புதிய விலாசம்
No.17, Kandy Road, Jaffna.



றொமானியா ஹொட்டேல் வேலைவாய்ப்பு



Cook Helper / Grill Worker / Salad Maker / Sandwich Maker / Waiter Helper / Bartender / Dish Washer / Cleaner

உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் இலவசம்!
சம்பளம் US $ 450 - 500
81,540 - 90,600/-

விசா - டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!
இதுவரை 35 பேர் வேலைவாய்ப்புப் பெற்றனர்
நீங்களும் இந்த அரிய வாய்ப்பைப் பெற...
(C-8938)

எமரல்ட் ஐல்
License No. 2268
077 003 8215
077 554 6956
021 221 9221

இல.221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்.
(இஷாரா புடவையகம். The Lovers / Tean Girls அருகே)
www.emeraldisle.lk jaffna@emeraldisle.lk



கனேடிய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கற்கை நிலையத்தில் வேலைவாய்ப்பு

1. வரவேற்பாளர் (பகுதி நேரமாக)
2. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்

தகுதி : O/L பரீட்சைக்கு தோற்றியிருத்தல்

விபரங்களுக்கு : 077 104 1923

(C-8927)


## கிளிநொச்சி இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

(கிளிநொச்சி)

டுபாயிலிருந்து சட்டவிரோதமான முறையில் சிகரெட்டுக்களை கடத்தி வந்த கிளிநொச்சி வாசி, கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிக்கினார்.

பொலிஸ்போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில், அவரை கைது செய்து விசாரணை நடத்தியபோது, இந்த கடத்தல் விவகாரம் அம்பலமானது.

கிளிநொச்சி, பரந்தனை சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே டுபாயிலிருந்து சிகரெட்டை கொண்டு வந்திருந்தார். (ம-3)


ஊடகத்துறைச் சான்றிதழ்
பயிற்சிநெறி

• வெகுசன ஊடகத்துறையில் பிரகாசிக்க
• வானொலி, தொலைக்காட்சியில்
• தொகுப்பாளர் மற்றும் அறிவிப்பாளராவதற்கு
• ஊடகவியலாளராவதற்கு.
• குறும்பட இயக்குனராவதற்கு.
• வீடியோ, ஓடியோ எடிட்டிங், டிசைன் & லேஅவுட், டியிட்டல் கமராக்களை நீங்களே கையாளலாம்.
• 100% தொழில்சார் களப்பணிப் பயிற்சிகள் பயிற்சிகள் வார, வார இறுதி நாட்களில்





விண்ணப்ப முடிவுத் திகதி
20.01.2020

jaffnamediastudies27@gmail.com

MRI

278, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 488 9228
076 980 1509
021 221 6277

(C-8930)



CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401 மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
(C-8829)

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413



உச்சிப்பிள்ளையார் துணை

தென்னிந்திய யாத்திரை

ஆரம்பம்: 03.02.2020 நாட்கள்: 16

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஊடான யாத்திரை உச்சிப் பிள்ளையார், 9 நவக்கிரக ஆலயங்கள், பஞ்சபூதத் திருத்தலங்கள், ஆறுபடை முருகன், குருவாயூர், திருப்பதி, மதுரை மீனாட்சி, இராமேஸ்வரம் உட்பட 60க்கு குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க
ஸ்ரீரெங்கநாதன் 077 768 0102 ராஜன் 077 736 2154

மலேசியா சிங்கப்பூர் ரூர்

மலேசியா சிங்கப்பூர் சுற்றுலா ஆரம்பம்: 23.02.2020

5 இரவு 6 நாட்கள் அனைத்து செலவுகளும் உட்பட விபரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்க. உணவு பொபே. சைவம், அசைவம் தங்குமிடங்கள், 4 ஸ்ரார் அறைகள்

விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க
T.P: 077 736 2154, 077 768 0102

காசி சீரடி யாத்திரை

ஆரம்பம்: 03.03.2020 நாட்கள் 15 யாத்திரீகர் 15

டெல்லி நாராயணர் உட்பட சுற்றிப் பார்த்தல், ஆக்ரா, தாஜ்மஹால், கிருஸ்ண ஜென்ம பூமி, பிரேம்மந்திர் அலகாபாத், திருவேணிசங்கமம், கயா சிரார்த்தம் செய்யுமிடம், காசியில் 15 இடங்கள், புத்தகாயா, இராமேஸ்வரம், சீரடி பாபா, சனிசிங்கனாப்பூர், திரியம்பகேஸ்வரர், ஜோதிலிங்கம், நாசிந், பஞ்சவடி, உத்தரகோசமங்கை, காளபைரவர் உட்பட.

விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க
உணவு: சுத்தமான சைவ உணவு, அனைத்து செலவுகளும் உட்பட

யாத்திரையில் எமது சேவை

இருவழி விமான ரிக்கெட், மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு, காப்பி, ரீ, குடிநீர், தரமான தங்குமிடம், 2 பேருக்கு வெஸ்ரன் கொமட், குளியலறை, கட்டில், மெத்தை இணைந்த அறைகள் A/C வாகன வசதி, யாழ் - கொழும்பு வாகன வசதி செய்து தரப்படும்.

குறைந்த கட்டணம் நிறைவான தரிசனம்

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் - மகன் ராஜன்
Office: City Center Shopping Complex, 3rd Floor,
No. 59, 3/6, Sea Street, Colombo - 11
Tel: 077 768 0102, 077 736 2154
E-mail : sriranganathan2601@gmail.com
Facebook : sridevisriranganathanthuraiappa
(C-8920)



யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
Jaffna International Trade Fair

11th EDITION

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

24
25
26

JITF 2020

ஜனவரி / January
10.00 AM - 8.00 PM
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)

www.jitf.lk
jitf.lk

ICT | FOOD & BEVERAGE | APPAREL | AUTOMOBILE | CONSTRUCTION | AGRICULTURE

PLATINUM SPONSOR: INSEE CEMENT
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY

OFFICIAL PARTNERS
TELECOMMUNICATION: Sri Lanka Telecom Mobitel
FOOT WEAR: DSI
FOOD
COSMETICS: British Cosmetics
POWER TOOLS: DIMO
PRINT MEDIA

ENDORSED & SUPPORTED BY
Ministry of Industry & Commerce
Jaffna Municipal Council
Consulate General of India Jaffna

PARTNER COUNTRY
India

RIZWAN +773 959 835 rizwan@saexhibitions.com
(C-8937)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.